பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T' Phone: 23794

# உதயன்

விலை
ரூ2/50

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆனி மீ 11 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஃதா பிறை 20 25 · 06 · 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY (கதிர்:- 170

## போலி 500 ரூபா நோட்டு புழக்கத்தில்! ஏமாறுதீர்கள்!

கொழும்பு, ஜூன் 25

500 ரூபா கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாக பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

பொலீஸ் தலைமைக் காரியாலயம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஐந்நூறு ரூபா கள்ள நோட்டு புழக்கத்தில் இருப்பது பல சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்த ஆண்டில் மார்ச் மாதம் முதலாவது 500 ரூபா கள்ள நோட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

1985, 1987 ஆண்டுகளில் அச்சடிக்கப்பட்ட நோட்டுக்களில்தான் கள்ள நோட்டுக்களும் உலாவுகின்றன. [ஓ-எ]

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் பகிஷ்கரிப்பு

### ஒரு வார காலம் தொடரும்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இன்று முதல் ஒரு வாரத்துக்கு தமது விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கவிருக்கின்றனர்.

தமது கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் பாடசாலை மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துமே இப் பகிஷ்கரிப்பு இடம்பெறவிருக்கிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் இப்பகிஷ்கரிப்பு அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. (ஓ-3)

## நாகர்கோவில் பகுதியில் இரு சகோதரர்கள் பலி!

வடமராட்சி, ஜூன் 25

நாகர்கோவில் பகுதியில் இரு வயோதிபச் சகோதரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

நேற்று முன்தினம் அதிகாலையில் கடற் தொழிலுக்குச் சென்ற வேளையில் இவர்கள் சூட்டுக்கு இலக்காகி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாகர்கோவில் வடக்கு வாசிகளான எஸ் நடேஸ் (வயது 60), எஸ் முருகேஸ் (வயது 55) ஆகியோரே கொலையுண்ட சகோதரர்கள் ஆவர். (ஓ-160)

## நெல்லியடியில் கிரனேட்வீச்சு; கடைகள் திறக்கப்படவில்லை

நெல்லியடியில் நேற்றுக் காலை 8 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதனை அடுத்து நாலா பக்கங்களிலும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. நவிண்டில், சிவட்டிப் பகுதியிலும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படையினர் சுற்றி வளைத்துத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதேவேளை நேற்று நெல்லியடியில் உள்ள கடைகள் அனைத்தும் திறக்கப்பட வேண்டும் என்று சுவரொட்டிகள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது என்பது தெரிந்ததே.

எனினும் கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்து பதற்றம் ஏற்பட்டதால் கடைகள் திறக்கப்படவில்லை. போக்குவரத்துகள் வேறு பாதைகளில் நடந்தன. நண்பகல் அளவில் போக்குவரத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஓ-70-160-9

## பிரேமா பேச்சு குறித்து உடனடியாகக் கருத்து இல்லை

புதுடில்லி, ஜூன் 25

அடுத்த மாத முடிவிற்குள் இந்திய அமைதிப்படை திரும்பிச் செல்ல வேண்டும். முடியவில்லையானால், இந்தியப்படை முகாம்களுக்குள் முடங்கி இருக்க வேண்டும் — என்று இலங்கை ஜனாதிபதி கடந்த வெள்ளிக்கிழமை கூறியது குறித்து —

உடனடியாகக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று இந்திய வெளியுறவு அதிகாரிகள் கூறியதாக —

ஏஜென்சிச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

மஹியங்கனையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'கம் உதாவ' 11 ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய திரு. பிரேமதாசா இந்திய அமைதிப்படை குறித்து தெரிவித்த கருத்துக்கள் பற்றி அபிப்பிராயம் கேட்டபோதே —

இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி கருத்துத் தெரிவிக்க மறுத்தார் என்று— அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ-ச)

## கழுத்தில், அட்டைகளுடன் கம்பங்களில் 9 இளைஞர்!

### மொரட்டுவையில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 25

மொரட்டுவ ஸ்டேசன் வீதியில் 9 இளைஞர்கள் மின்கம்பங்களில் கட்டப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை காணப்பட்டனர்.

அவர்கள் ஒவ்வொருவரின் கழுத்தில் அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சார்க் மந்திரிகள் மாநாட்டில் அமைதிப்படை விவகாரம்

## பாகிஸ்தான் அமைச்சர் தகவல்

காத்மண்டு, ஜூன் 25

இலங்கையில் இந்திய அமைதிப் படை தொடர்ந்து இருப்பது, திரும்பிச் செல்லுமாறு அந்நாட்டு ஜனாதிபதி கேட்டிருப்பது ஆகிய விவகாரங்கள் அடுத்த மாதம் (ஜூலை மாதம்) பாகிஸ்தானில் நடக்க இருக்கும் "சார்க்" அமைப்பின் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் ஜனுப் யாகூப் கான் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் "சார்க்" அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் நடைபெற உள்ளது. அதற்கு முதல் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான மாநாடும் அங்கேயே நடைபெறவுள்ளது.

அந்த இரண்டு மாநாடுகளிலும், இலங்கையில் இந்திய அமைதிப்படை இருப்பது சம்பந்தமான விவகாரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று ஜனுப் யாகூப்கான் இங்கு வைத்துத் தெரிவித்தார்.

ஜனுப் யாகூப்கான் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேபாளத் தலைநகரான காத்மண்டு வந்திருக்கிறார். (அ-எ)

# கிளிநொச்சி திருநகரில் நேற்று நண்பகல் நடந்த மோதல்

## பல மணி நேரம் தொடர் ஷெல் வீச்சு

கிளிநொச்சி திருநகரில் நேற்று நண்பகல் 11 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதல் தொடர்ச்சியாக ஒன்றரை மணி நேரம் வரை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

மோதலின்போது பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

படையினர் தரப்பில் எட்டுப் பேரும் மறு தரப்பில் இருவரும் மரணமாகியிருக்கலாம் எனக் கூறப்பட்டது. எனினும் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் வாகனம் ஒன்று எரிந்து கொண்டிருப்பதாகவும் தகவல் ஒன்று கூறியது.

மோதல் சம்பவத்தின்போதும், பின்னரும் திருநகர், கணேசபுரம், கனகபுரம், ஜெயந்திநகர், 7 ஆம் வாய்க்கால் போன்ற பகுதிகளை நோக்கி மாலை வரை தொடர்ச்சியான ஷெல் வீச்சுக்கள் நடந்துகொண்டிருந்தன.

இதனால் பல வீடுகள் சேதமடைந்து இருக்கலாம் என்றும் ஷெல் தாக்குதல் நடைபெறும் பிரதேசம் குடிசனம் அதிகமாக உள்ள இடங்கள் ஆதலால் பொதுமக்கள் தரப்பிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலா எனவும் அஞ்சப்பட்டது.

மோதலில் காயம் அடைந்த ஜவான்கள் கிளிநொச்சி ருட்ரிகோ மைதானத்தில் வைத்து ஹெலிக்காப்டரில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

சம்பவத்தினைத்தொடர்ந்து கிளிநொச்சி நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. (ஓ-76-163)

சுபநேரம்
25—06—1989
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
08.55 முதல் 10.25 வரை
ராகுகாலம்:
04 25 முதல் 05.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# ராஜீவின் பதில் கடிதம் இன்னும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவில்லை!

கொழும்பு, ஜூன் 25

அமைதிப்படை விலக்கம் சம்பந்தமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அனுப்பிய பதில் கடிதம் கடந்த வியாழக்கிழமை கொழும்புக்குக் கிடைத்தது.

இராஜதந்திர வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. கடிதத்தின் விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

இதனிடையில் —

கொழும்பில் இந்தியத் தூதரகத்துக்கு வந்து சேர்ந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவரிடம் கையளிக்கப்பட்டிருந்தது —

ஜனாதிபதியிடம் இந்தியத் தூதர் நேராக கடிதத்தைக் கையளிக்க ஏற்பாடு செய்திருக்கவில்லை—

ஜனாதிபதியும் மற்றும் அரசப் பிரமுகர்களும் மஹியங்கனைக்கு சென்றிருந்ததால் தான் ஜனாதிபதியிடம் பிரதமரின் கடிதம் கையளிக்கப்படவில்லை என்று கூறிவிட முடியாது என்றும் —

கடிதத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்டும் ஒரு முயற்சியாகவே ஜனாதிபதி செயலக அதிகாரியிடம் திரு. காந்தியின் கடிதத்தைக் கையளிக்க இந்தியா தீர்மானித்தது என்றும் — "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டது. (அ-எ)

முச்சந்தி முரளி



எங்கடை பகுதிகளையும் துப்பரவாக வைச்சிருக்க வேணுமெண்டா, சிங்கப்பூரை விட கடுமையான சட்டங்கள் தேவை பாருங்கோ...!

## கைதடியில் ஊரடங்கு

கைதடிப்பகுதியில் நேற்றுக் காலை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஒலிபெருக்கி மூலம் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது.

10 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சகல ஆண்களையும் கைதடி வடக்கு அரசடி கயித்தசிட்டி கந்தசுவாமி ஆலயத்தில் கூடுமாறு அறிவிக்கப்பட்டது.

மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை. (ஓ- 3- 10)

## சிங்கப்பூரில் இனிமேல் இப்படியும் தண்டனை!

சிங்கப்பூர், ஜூன் 25

பொது மலசல கூடங்களைப் பாவித்து பின் துப்புரவு செய்யாதவர்களுக்கு ஆகக் கூடியது 500 அமெரிக்க டாலர்கள் (இலங்கைப் பணத்தில் 15,000 ரூபா) அபராதம் விதிக்கும் சட்டம் ஒன்றை சிங்கப்பூர் அரசு அடுத்த மாதம் அமுலுக்குக் கொண்டு வரவிருக்கிறது.

இச்சட்டம் பொதுஇடங்களாக் கருதப்படும் ஹோட்டல்கள், அரச அலுவலகங்கள், தியேட்டர்கள், விடுதிகள் ஆகியவற்றுக்கும் அமுல் நடத்தப்படும் என்று சிங்கப்பூர் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முதல் தடவையாகக் குற்றஞ்செய்பவருக்கு 75 டாலரும் இரண்டாவது தடவையாக குற்றஞ்செய்பவருக்கு 250 டாலர் அபராதமும் மூன்றுக்கும் மேற்பட்ட தடவை குற்றம் புரிந்தவருக்கு 500 டாலர்களும் அபராதம் விதிக்கச் சட்டம் இடமளிக்கிறது. (ஓ-எ)

## சீனியின் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 25

சீனியின் விலை (கிலோஒன்று) ஒரு ரூபாவால் உயர்ந்திருப்பதாக சீனி இறக்குமதியாளர் சங்கப் பிரமுகர் தெரிவித்திருந்த தகவலை உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சு மறுத்துள்ளது.

சீனியின் விலை சர்வதேசச் சந்தையில் அதிகரித்திருந்தாலும் இங்கு விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

சீனி ஒரு கிலோ 23. ரூபா 50 சதமாகவே விற்கப்படும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ- ச)

## அ. தி. மு. க. பிரமுகர்கள் றிமாண்டில்!

சென்னை, ஜூன் 25

அ. தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரமும் நாகபட்டினம் அ. தி. மு. க. எம். பி. திரு. மகாலிங்கம் ஆகியோர் பதினைந்து நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

தஞ்சாவூருக்கு முதலமைச்சர் கருணாநிதி இவ் வாரம் விஜயம் செய்வதை ஒட்டி இவர்கள் இருவரும் உட்பட அ. தி. மு. க. தொண்டர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஓ எ)

## ரயில் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 25

நேற்றும் யாழ். நகருக்கான பயணிகள் ரயில சேவை நடைபெறவில்லை. (ஓ-9)

## காரைநகரில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 25

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காரைநகர் ஸ்ரீலங்கா கடற்படை முகாமை அண்டிய பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டன.

பின்னர் சுமார் 5 மணியளவில் ஷெல்கள் வீசப்பட்டன. ஒரு ஷெல் சம்பந்தர்கண்டிப் பகுதியில் விழுந்து வெடித்தது. இதனால் வீடு ஒன்று சேதம் அடைந்தது. உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. (ஓ)

## பருத்தித்துறையில் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

நேற்று பருத்தித்துறை ஓராம் கட்டைக்குச சமீபமாக மோதல் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தில் இருவர் கொலையுண்டதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன.

சம்பவத்தை அடுத்து பருத்தித்துறைக்கான போக்குவரத்துகள் புலோலியுடன் நிறுத்தப்பட்டன.

மோதல் நடந்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ஓ-9)

## ஒத்திவைப்பு

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் நாளை திங்கட்கிழமை வரை ஒத்திவைத்தது.

சாட்சிகள் சமுகமளிக்காத காரணத்தை முன்னிட்டு விசாரணையை ஒத்திவைக்கும்படி மனுதார் சாரபில் விண்ணப்பம சமர்ப்பிக்கப்பட்டது. (அ-எ)

## கொக்குவிலில்

கொக்குவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில ஒருவர் உயிரிழந்தார், நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று பிற்பகலில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

7 சிறி தொடர் இலக்க வேஸ்பா ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குஉண்டு. தொடர்பு தபாற்சந்தோர் வீடு கோண் டாவில் கிழக்கு, கோண்டா வில். [1016]

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்துக்கு மிக அண்மை யில் உள்ள சஞ்சியன் தோட் டக்காணி 24 பரப்பு விற் பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. S. பொன்னுத்துரை, கர வச்சை அளவெட்டி வடக்கு, அளவெட்டி. [சி-2953]

மாவிட்டபுரம் தம்பாகம்பி வீதி, பனை செல்லிப்பனையில் உள்ள 5½ பரப்பு காணியில் 5 அறை குசினியுடன் வீடு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. S. பொன்னுத்துரை கர வச்சை அளவெட்டி வடக்கு, அளவெட்டி [சி-2952]

Ken wood Sterio Music set National RX 5285 Double Cassette National RX-C 51 Technics Equlizer புதிய படங்களுடன் Vedio Cassettes National M3 Vedio Camera Vedio head என் பனவும் உதிரிப் பாகங்களும் விற்பனைக்கு உள்ளது. தொட ர்பு: மினிரோட்ஸ் சென்ரர் 3 J M C பில்டிங் ஸ்ரான்லி றூட், யாழ்ப்பாணம் (1013)

தடுப்பூசி, பூசிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு 107, சலைாகள் வீதி. ...ல்வி ...ங்... [1008]

## தேவை

நல்ல நிலையில் உள்ள A 50 அல்லது A55 அல்லதுமொறிஸ் மைனர் கார் உடன் தேவை. தனியார் பாவிப்பிலுள்ளது விரும்பத்தக்கது. நேரில் வர வும். R. G. நாயகம், 149 [303], K. K. S வீதி, யாழ்ப்பாணம். (1006)

கைக்கடிகாரம் திருத்துவ தில் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. Winting Automatric திருத்துவதில் தேர்ச்சி பெற்ற வர்கள் உடன் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங் கப்படும். சிவா வாச் வேக்ஸ் 185, நவீன சந்தை, யாழ்ப் பாணம். (1009)

## சோதிடம்

(29-6-89) வியாழமாற்றம் விலை ரூபா 4/- எங்கும் கிடை க்கும் ஸ்ரீசாயிபாபா வரலாறு களும் எல்லா இராசிபலன் களும் நூலாசிரியர் சக்திப காலன் (அச்ம சோதி சுத் துவ ஞானம்) காங்கேசன் துறை விநியோகஸ்தர் பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப் பாணம் (1011)

## மணமகன் தேவை

யாழ்ப்பாண வேளாளர் ... சைவ A/L சித்தியடைந்த 21 வயது ஒரே மகளுக்கு ... இனத்தைச் சேர்ந்த, இலங்கையில் நிரந்தர ... தொழில் புரியும் 30 வயதிற்கு மேற்படாத மணமகன் தேவை சீதனம் உண்டு C/o 72, உதயன், யாழ்ப்பாணம் (11307)

## மணமகள் தேவை

யாழ்ப்பாண உயர் இந்து வேளாள குல அரசாங்கத் திணைக்களத்தில் உயர்பதவி வகிக்கும் 35 வயது பட்டதாரி மணமகன், 30 வயதுக்கு உட் பட்ட உயர்குல கவர்ச்சி மிக்க ஆசிரியை, டாக்டர் மணமக ளைத் தேடுகின்றார். சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகக் குறிப்போடு விண்ணப்பிக்க வும். தொடர்பு 549, C/o உதயன், யாழ்ப்பாணம். (1012)

## மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து கோவி யரின 33 வயது அழகிய அர சாங்க உத்தியோகத்தருக்கு 41 வயதுக்குட்பட்ட அரசாங்க அல்லது தனியார் துறையில் வேலை செய்யும் மணமகன் தேவை தாரமிழந்தோர், விவாகரத்தானோரும்கூட விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட் டம்,யாழ்ப்பாணம். (11353)

## விற்பனையாளர் தேவை

ஸ்தாபனத்துக்கு காசாள ராகவும், விற்பனையாளராக வும் வேலை செய்யக்கூடிய பெண் அல்லது நாற்பது வய துக்கு மேற்பட்ட ஆண் தேவை அனுபவமுள்ளவரு க்கு முன்னுரிமை வழங்கப் படும். பத்துவயதுக்கு உட் பட்ட ஆண் பிள்ளையும் தேவை. நேரில் விண்ணப்பிக் கவும் மினிரோட்ஸ் சென்ரர், 3.J M C பில்டிங் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (1014)

## சேவை

யாழ் திருக்குடும்ப கன்னி யர் மடத்திற்கு அண்மையில் பெண்களுக்கு உணவுடன் இருப்பிட வசதி உண்டு. 547, C/o உதயன் யாழ்ப்பாணம். (1003)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், குப்குஞ்சு, விருத்துக் குஞ்சு எப்பொழுதும் பெற் றுக்கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்ளவும். Lucky farm House மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. [11340]

Broiler பேட்டுக்கோழி, சேவல், குப்குஞ்சு, விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம் பரப் பலகை உண்டு. Nallur Farm Centre, 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை யடி, நல்லூர் (சி/2797)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவல் குஞ்சுகள் 28 ஆந் திகதி புதன் கிழமையும் Hybro புரொயிலர் குஞ்சுகள் 29 ஆந் திகதி வியா ழக்கிழமையும் விநியோகிக் கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். 1015)

## தவறிவிட்டது

வட்டு இந்துக் கல்லூரிக் கும் சித்தன்கேணி சிவன் கோயிலுக்கும் இடையில் ஒரு தொகைப் பணம் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: சன்மானம் வழங்கப்படும். ... இல- 73 ... யாழ்ப் பாணம் (1357)

## இடம்மாற்றம்

187/6, கில்னர் லேன், யாழ் ப்பாணம் என்னும் விலாசத் தில் அமைந்திருந்த ரகு போட்டோ டெக்னிக் 7.6 89 முதல் 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத் திற்கு இடம்மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதை சகல ருக்கும் அறியத்தருகின்றோம். அன்றைய தினம் வருகை தந்த அனைவருக்கும் எமது நன்றிகள். (11351)

## Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள வும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங் கள்; Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

## பதவி வெற்றிடம் பொருத்துநர்கள்

எமது சங்கத்தின் புடைவை ஆலைக்கு அனுபவம் வாய்ந்த பொருத்துநர்கள் தேவைப்படுகின்றனர். 8 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும். விரும்புவோர் 01-07-89 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கும் 12.00 மணிக்குமிடையில் தமது சான்றிதழ்களுடன் கோண்டாவில் இருபாலை வீதி யில் அமைந்துள்ள எமது கூட்டுறவுப் புடைவை ஆலைக்கு நேரில் வரவும்.


—பொதுமுகாமையாளர்,

யாழ் மாவட்ட
புடைவை நெசவாளர்கூட்டுறவுச் சங்கம்.

(C/2951)

## ஓராண்டு நினைவஞ்சலி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கால் நூற்றுண்டு காலமாக நற்பெயருடனும் புகழுடனும் அயராது சேவையாற்றி 1978 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்த டாக்டர் G. செல்வத்துரை L R C P & S (Edln) L R F P & S (Glas) அவர்களது தர்மபத்தினி



### இரத்தினம்மா

தோற்றம்: 19 3 - 02 08 — மறைவு: 1988 - 07 - 05

அன்பின் திருவுருவாய்
அறத்தின் உறைவிடமாய்
இன்சொல் அரசியாய்
பண்பின் உயர் பீடமாய்
பொறுமையின் இலக்கணமாய்
தாய்மையின் உவமையாய்
எம்மை என்றும் இமையால் காத்தமை
எம் நினைவில் என்றும் நீங்காது நிற்கும்
இந்நினைவே எமக்கு இன்று நிழல்.

மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கணபதி வாசா'
டாக்டர் செல்வத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

## அறிவித்தல்

மாதகல் இறையில் உள்ள ''கியாவத்தை'' நிலப் பரப்பு 9 ம் குளி 9ம் என்னும் காணி சம்பந்தமாக மல் லாகம் மாவட்ட நீதிமன்றில் எல் 2577 இலக்க வழக்கு நடைபெற்று முடிவுறுமல் இருக்கிறது. குறித்த காணி முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ வழக்கு முடிவடைய முன்னர் அறுதி விற்கக் கூடாது என நீதி மன்றினால் ஓர் இடைக்காலத் தடையுத்தரவு 5 - 11 - 86ல் எதிராளிகளுக்கு எதிராக வழங்கப் பட் டது. எனவே, எவராவது இந்தக்காணியை கொள் வனவு செய்தால் அது சட்டவிரோதமானது என்றும் அக் கொள்வனவு செல்லுபடியாகாதென நீதிமன்ற நடவடிக்கை காலக்கிரமத்தில் எடுக்க வேண் டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படு மென்றும் இத்தால் சகலருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

சின்னத்தம்பி மார்க்கண்டு,
மனைவி புவனேஸ்வரி, மாதகல்.
மல்லாகம் மாவட்ட நீதிமன்ற
எல் 2577 இலக்க வழக்காளிகள்.

(988)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### செல்வி மேரிராணி மைக்கேல்

மலர்வு: 17 - 02 - 1967 — உதிர்வு: 25 - 06 - 1988

எங்கள் அன்புச் செல்வமே! - நீர் அணைந்து ஓராண்டு காலம் ஆகி விட்டது. எல்லோருக்கும் இனிய வளாய், அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் வாழ்ந்து எங்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மை விட்டு சென்ற அன்புச் செல்வமே! எங்கு தான் சென் றீரோ? கண்ணீரில் மிதக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தி கின்றோம்.

நின் பிரிவால் வாடும்
பெற்றோர்கள், சகோதரர்கள்,
அத்தான்மார், அண்ணிமார்,
உற்றார், உறவினர்கள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

[986]

## இரணைமடுவில் மோதல்


கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி இரணை மடுப் பகுதியில் கடந்த வியாழக் கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்ப வம் ஒன்றில் ஒருவர் உயிரிழந் தார்.

மரணமானவர் எஸ். ஆர், ரகு (வயது 20) எனத் தெரி விக்கப்பட்டது. [ஒ-76]

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வல்வை மண்ணில் அவதரித்து,
மயிலை மண்ணின் துணை ஏற்று
துபாய் நாட்டில் பணிபுரிந்து மீண்டும்
மயிலை மண்ணில் அமரத்துவமெய்திய



### அமரர் திரு. ஸ்ரீதரன் (சிறி)

அன்னை மடியில்: 1944. 10. 30 — அம்பாளின் திருப்பாதங்களில்: 1989. 05. 25

'' எங்கள் மனமென்னுமொரு நினைவாலயம்
இடங் கொண்ட நீ ஒரு கலாலயம்
திங்கள் தனை மறைத்ததோ பிரளயம்?
தீராதோ எம் வாழ்வின் சோகமயம்? ''

நாளை திங்கட்கிழமை (26. 06. 1989) அன்று எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் எங்கள் தெய்வம் அமரர் திரு. சோமசுந்தரம் ஸ்ரீதரன் (சிறி) அவர்களின் அந்தியேட்டி கிரியைகளிலும், சபிண்டீகரண வைபவத் திலும் உற்றார், உறவினர், நண்பர்களை பங்கு கொள்ளு மாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கலாலயா வீடியோ விஷன்,
வீரமாணிக்கதேவன் துறை,
மயிலிட்டி.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்,
மைத்துனர்.

(980)

## மகாபொல கொடுப்பனவுகள்

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகளுக்குரிய ஒழுங்குகள் கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்பட்டுள்ளது.

1. 8ஆவது, 9ஆவது, 10ஆவது தவணைப்பணம்-1988
   87/FM 2ஆம் வருட மருத்துவ பீட மாணவர்கள்
2. 5ஆவது, 6ஆவது, 7ஆவது தவணைப்பணம்-1988
   86/FM 3ஆம், 85/FM 4ஆம், 84/FM 5ஆம், 83/FM 6ஆம் வருட மருத்துவ பீட மாணவர்கள்

   (1, 2:) 26-06-89, 03-07-89, 17-07-89 — முற்பகல் 9.00—> 12.00

3. பரீட்சையில் தவறி மேன்முறையீடு செய்த கலை, விஞ்ஞான மாணவர்களுக்கான 1988ஆம் ஆண்டிற்கான 1ஆவது -- 10ஆவது வரையான தவணைப்பண கொடுப்பனவு — 26-06-89, 03-07-89, 17-07-89 — முற்பகல் 1.30—> 3.00

4. 1ஆவது தவணைப்பணம் ஜூன் 89

| | | | | |
|---|---|---|---|---|
| 87/A, 87/C, 87/BAD | கலை, வர்த்தகம், வியாபார நிர்வாகம் | 2ஆம் வருட மாணவர்கள் | 27-06-89, 04-07-89, 14-07-89 | முற்பகல் 9.00—> 12.00 |
| 86/A, 86/C, 86/BAD | கலை, வர்த்தகம், வியாபார நிர்வாகம் | 3ஆம் வருட மாணவர்கள் | 27-06-89, 04-07-89, 14-07-89 | பிற்பகல் 1.30—> 3.00 |
| 85/A, 85/C, 85/BAD | கலை, வர்த்தகம், வியாபார நிர்வாகம் | 4ஆம் வருட மாணவர்கள் | 28-06-89, 05-07-89, 19-07-89 | முற்பகல் 9.00—> 12.00 |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. 2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப் புத்தகம்.

- பதிவாளர்

(சி-2900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை தமிழ்ப் பகுதிகளுக்கு

## மரண விசாரணை அதிகாரி நியமிக்கும்படி கோரிக்கை

கல்முனை, ஜூன் 25

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு ஒரு மரணவிசாரணை அதிகாரி இல்லாததால் விபத்துக்களில் சிக்கி இறக்கும் தமிழர்களுக்கு விசாரணை இல்லாது அடக்கம் செய்ய வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்துக்கு முஸ்லிம் ஒருவரே மரணவிசாரணை அதிகாரியாக இருப்பதால் கல்முனையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இன மோதல்களால் அவ்வதிகாரி தமிழ்ப் பிரதேசத்துக்குள் வருவதில்லை.

இவ்வாறன நிலைமையைப் போக்கி தமிழர்களுக்கென மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தின் உபதலைவரும், கல்முனைப் பிரதேச சமாதான சபைத் தலைவருமான திரு. பாண்டியூரன் அம்பாறை மாவட்ட இந்தியப் படைகளின் பிரிகேடியர் திரு. ஜி. கே. துக்கலுக்கு இக்கோரிக்கையை அனுப்பி உள்ளார். (ச-84)

### மாணவி காயம்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 25

மினிபஸ் — சைக்கிள் விபத்தில் மாணவி ஒருவர் பலத்த காயத்திற்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பெரிய அரசடியில் இடம்பெற்றது. கச்சாய் அல்லாரையைச் சேர்ந்த சின்னையா சிவயோகம் (வயது 17) என்னும் மாணவியே காயத்திற்குள்ளானவராவார். (ஓ-117)

### ஹர்த்தால்

கேகாலை, கண்டிப் பகுதிகளில் வியாழனன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மாத்தறையில் உயிரிழந்த (கேகாலை வாசியான) ஜே. வி. பி. உறுப்பினர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே இந்தஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (உ)

யாழ் பல்கலைக் கழக

## நுண்கலைப்பீட மாணவர்களுக்கு பட்டதாரி பட்டம்வழங்க ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் பயிலும் மாணவர்களுக்கு பட்டதாரிப்பட்டம் வழங்குவது சம்பந்தமாக ஆராய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மருதனமடம் நுண்கலைப்பீடத்தில் இதுவரை காலமும் டிப்புளோமா பட்டப் படிப்பே இடம் பெற்று வருகிறது.

இப் பீடத்தில் பட்டதாரிப் பட்டம் வழங்கல், புதியதுறைகள் ஆரம்பித்தல் ஆகிய விடயங்கள் குறித்து இக் குழு ஆராயவிருக்கிறது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமையிலான இக் குழுவில் பேராசிரியர்களான கே. சிவத்தம்பி, என். சிவசாமி, எஸ். வி. பரமேஸ்வரன், என். தருமரத்தினம் உட்பட திருவாளர்கள் எஸ். சிவபாதசுந்தரம், கே. தேவசிகாமணி ஆகியோரும இடம் பெற்றுள்ளனர்.

தற்சமயம் மருதனமடம் நுண்கலைப்பீடத்தில்புதியகட்டடமும், விடுதியும் அமைக்கப்பட்டு வருகிறது. (ச-3)

கிளிநொச்சி மாவட்டம்:

## பூரண விவரங்கள் இல்லாததால் நிவாரணம் தாமதம்

### அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களால் கடும் பாதிப்புற்றோர் தமது விவரங்களைப் பூரணமாக அனுப்பாததால் நிவாரணம் வழங்குவது தாமதம் அடைந்துள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதனைத் தெரியப்படுத்தி உள்ளார்.

கிளிநொச்சியில் கடும் பாதிப்புற்றோருக்கு வழங்கப்படவிருக்கும் நிவாரணங்கள் தடைப்படுவதற்குக் காரணம் பாதிப்படைந்தவர்கள் தமது விவரங்களை முழுமையாகச் சமர்ப்பிக்காததுதான்.

ஆகவே மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விவரங்களை உடன் சமர்ப்பிப்பதன் மூலம் நிவாரணத்தை உடன் வழங்கமுடியும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ-3)

ஜனசக்தித் திட்டம்:

## காலதாமதமின்றிப் பணம் கிடைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப்படும் பொருட்களுக்கானபணம்கால தாமதம் இன்றிக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனசக்தித்திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படும்பொருள்களுக்கான பணத்தை அந்த அந்த ப. நோ. கூ. சங்கங்களில் கடமையாற்றும் கூட்டுறவுப் பரிசோதகர்களின் சிபார்சுடன் நேரடியாக அரசாங்க அதிபரிடம் சமர்பித்து பெறலாம்.

உணவு முத்திரை போன்றவற்றுக்கான பணக் கொடுப்பனவு முறையில் ஏற்படும் தாமத்தை தவிர்க்கும் நோக்கத்துடன் ஜனசக்தித்திட்டத்துக்கு இப்புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாக கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க-3)

### அடையாளம் காணப்பட்டது

மட்டக்களப்பு, ஜூன் 25

களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் இந்தியப்படையினரால் ஒப்படைக்கப்பட்ட சடலம் பழகாமம் வாசியான வி. நவரட்ணராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தியப்படை வாகனத்தைக் கண்டு ஓட முயன்ற சமயம் சுடப்பட்டதாக இந்தியப் படையினர் தெரிவித்துள்ளனர். (ச-21)

### மாநகர வடிகால்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பல காலமாக திருத்தப்படாது இருந்த யாழ்-மாநகர சபை வடிகால்களை திருத்த கேள்விப்பத்திரங்கள் கோரப்படவுள்ளன.

மழைகாலம் வருவதற்கு முன் வடிகால்களைத் திருத்தம் செய்தால்தான் வெள்ளம் நிற்காமல் குளங்களுக்குள் சேரும் என்பதால் 50 இலட்சம் ரூபா செலவில் வடிகால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இதற்கானகேள்விப்பத்திரம் கோரும் வேலைகளை மாநகர சபை மேற்கொண்டு வருகிறது. (க-3)

## செய்மதி தொடர்பு மூலம் கொழும்பில் தொலைபேசி

கொழும்பு ஜூன் 25

செய்மதிமூலமான தொலைத் தொடர்பு வானொலித் தொலைபேசிச் சேவை கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதிய தொலைபேசிச் சேவையை திறைசேரிக் கட்டடத்தில் வைத்து பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா தொடக்கி வைத்தார்.

கொழும்பிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இயங்கக் கூடியவசதி புதிய செய்மதித் தொலைபேசிச் சேவையில் உண்டு.

அதன் பிரகாரம் புதிய தொலைபேசிவசதியைப் பெற்ற ஒருவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் தாம் செல்லும் எந்த இடத்தில் இருந்தும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். வாகனத்தில் பயணம் செய்யும்போதும் தொலைபேசியில் பேசக் கூடியவாய்ப்பு உண்டு.

இலங்கை - சுவீடன்- அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியில் ஸ்தாபிக்கப்பட்ட "ரெலி ரெல்" என்ற நிறுவனமே புதிய தொலைபேசி வசதியைச் செய்துள்ளது. (அ)

## எவரெஸ்டில் கண்டி மாணவர்

கொழும்பு, ஜூன் 25

கண்டி தர்மராஜாக் கல்லூரி சாரண மாணவர் குழு ஒன்று எவரெஸ்ட் சிகரத்தில் 21 ஆயிரத்து 800 அடி உயரம்வரை ஏறிச் சாதனை புரிந்துவிட்டு தாயகம் திரும்பியது.

எவரெஸ்ட் சிகரத்தில் இவ்வளவு உயரம்வரை ஏறிய முதலாவது இலங்கைக் குழு இதுவாகும்.

நேபாளம், லுக்லா என்னுமிடத்தில் இருந்து இலங்கைக் குழு கடந்த மே மாதம் 17 ஆம் திகதி தனது எவரெஸ்ட் பயணத்தைத் தொடங்கியது.

21 ஆயிரத்து 800 அடி ஏற குழுவுக்கு 11 தினங்கள் எடுத்தது.

கடந்த ஆண்டு இதே கல்லூரியைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று எவரெஸ்டில் 21 ஆயிரம் அடிவரை ஏறிவிட்டு திரும்பியது. (உ-எ)

### ஓ. பி. ஈ. பட்டம்

கொழும்பு, ஜூன் 25

எலிஸபத் மகாராணியார் தனது பிறந்த தினத்தையொட்டி மொரட்டுவ பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஆதர் சி. கிளார்க்குக்கு ஓ.பி. ஈ பட்டம் வழங்கிக்கௌரவித்திருக்கிறார் (க-எ)

யாழ் சுகாதார திணைக்களத்தில்:

## அமைய எழுதுவினைஞர் பதவிக்கு சிற்றூழியர்களுக்கு முன்னுரிமை

### தொழிற் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்.25

யாழ். சுகாதாரத் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள அமைய எழுதுவினைஞர் பதவிகளுக்கு திணைக்களத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை அரசாங்க சுகாதார சேவைத் தொழிற்சங்கம் விடுத்துள்ளது.

யாழ்-கிளிநொச்சி சுகாதாரத்திணைக்களத்தில் 12 அமைய எழுதுவினைஞர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டு 5,000 பேர் வரையில் விண்ணப்பித்திருந்தனர்.

இதுசம்பந்தமாக இச்சங்கம் பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எம் திணைக்களத்தில் உள்ள சிற்றூழியர்களில் க. பொ. த.[உயர் தரப்] பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் உள்ளனர். அவர்கள் தம் கஷ்டநிலையில் இவ்வேலைக்கு வந்துள்ளனர். எழுதுவினைஞர் தெரிவில் இவர்களுக்குமுதலிடம்அளிக்க வேண்டும்.

இப்படி கோரப்பட்டுள்ளது. (ச-3)

### ஆமை வேகத்தில் வீதித் திருத்தம்

மாங்குளம், ஜூன் 25

முல்லைத்தீவு - பரந்தன் வீதி 10 ஆம் கட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை ஈ. ஆர். ஆர். பி. பகுதியினரால் மேற்கொள்ளப்படும் வீதித் திருத்தம் ஆமைவேகத்தில் செயல்படுகிறது.

இதனால் இவ்வீதியால் செல்லும் பாதசாரிகள், வாகன ஓட்டிகள் பலரும் பாதிக்கப்படுவதாக உதயனுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் புகாரிடுகின்றனர். (ச-94)

### ஆயுள்வேத வைத்தியர்

மட்டக்களப்பு, ஜூன் 25

ஆயுள்வேத வைத்தியர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை ஆயுள்வேத திணைக்களம் தகுதியானவர்களிடமிருந்து கோரியுள்ளது.

30-6-1989 விண்ணப்ப முடிவு திகதியாகும். (ச-21)

### சிறுவன் ஆஸ்பத்திரியில்

குருநகர், ஜூன் 25

யாழ். கொட்டடிச் சந்தியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் வந்த சிறுவன் காயமடைந்தான். இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் வெள்ளி பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. ஈசன் (வயது 14) என்னும் சிறுவனே காயம் அடைந்தவராவார் (ஓ-51)


## வறுத்த கைக்குத்து அரிசிமா

தரமான வறுத்த கைக்குத்து அரிசிமா பல்வேறு அளவுகளில் பனை அபிவிருத்திச் சபையினால் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தமாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

சந்தைப்படுத்தும் பகுதி,
(பனை அபிவிருத்திச் சபை)
இல: 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2894]


## கேள்வி அறிவித்தல்

### பிரதேசகல்வித்திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி — கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி (11 - 07 - 89) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி (07 - 07 - 1989) பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூபா. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா. இருநூற்றி ஐம்பதும் (ரூபா. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி (11.07.89) பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின் படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக் கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.


செல்வி தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
23 - 06 - 1989

| பாடசாலையின் பெயர். | வேலை விபரணம். | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை. |
|---|---|---|
| 1. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. | படுக்கை விடுதி | 1,200.000/- |
| 2. யா/உடுப்பிட்டி அ. மி. ஆண்கள் கல்லூரி. | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90' / 25' | 1,700.000/- |
| 3. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90' / 25' | 1,700.000/- |
| 4. யா/யாழ் மத்திய கல்லூரி. | மூன்று மாடிக் கட்டிடம் 130' / 25' | 1,[illegible]00.000/- |

[சி-2726]


நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரா




நிதித் துறையில் உங்கள் நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WANTED

Experienced English / Tamil Typist

Vacancy Exist for an English/Tamil Typist in a Reputed Firm at Jaffna. Should have minimum five years experience. A Lady with experience in Stencil Cutting, English / Tamil Tutes, Proof Reading and Maintaining Official Records Preferred.

**Salary Negotiable**

**Applications close on 5th July, 1989.**

(C/2895) 548 C/o. UTHAYAN


# யாழ் மார்புநோய் சிகிச்சைப் பிரிவில்

# பெண்களுக்கும் மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம். ஜூன் 25 யாழ் மார்புநோய்ச் சிகிச்சைப்பிரிவில் பெண்களுக்கும் மருத்துவ பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் இவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படும் என வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஆண்களுக்கு இதே தினத்தில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட போதிலும்— பெண்களுக்கான வசதிகள் இல்லாததன் காரணமாக பெண்களுக்கான வைத்திய பரிசோதனைகள் மயிலிட்டி, தெல்லிப்பழைப் பகுதியில் நடைபெற்றன.

எனினும் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டதை அடுத்து பெண்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்படுவதாக வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-10)

## காரைநகரில் விளையாட்டுப் போட்டி

காரைநகர், ஜூன் 25 காரைநகர் அல்வின் வீதி புதியதோர் உலகம் செய்வோம் நூலகத்தின் 2ஆவது ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நூலகத் தலைவர் திரு. எஸ். லிங்கராசா தலைமையில் நடைபெறும்.

காரைநகர் மத்தி கிராம சேவையாளர் திரு. எஸ். சிவலிங்கம் வெற்றி பெற்றோருக்கு பரிசுகளை வழங்குவார். (இ-73)


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### வடிகால் துப்புரவு செய்யும் வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வடிகால் துப்புரவு செய்யும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1989 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப்பிணைப் பணம்மீளளிக் கப்படக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கன்னாதிட்டி குளத்திலிருந்து புல்லுக்குளம் வரை | 500/- | 100/- | 100,000/- |
| 2. | பரவைக் குளத்திலிருந்து ஆரிய குளம்-புல்லுக்குளம்-கடல்வரை | 500/- | 100/- | 100,000/- |
| 3. | மருதடிவீதி-பிள்ளையார் குளம்-கோயில்வீதி-தேவரீரிகுளம்-கடல் வரை | 500/- | 100/- | 100,000/- |
| 4. | இராசாவின் தோட்டம் வீதியிலிருந்து ஆரியகுளம் வரை | 500/- | 100/- | 100,000/- |
| 5. | கச்சேரி நல்லூர்வீதி, நாயன்மார்குளம், ஸ்ரான்லி கல்லூரியிலிருந்து மூர்த்தவிநாயகர்வீதி, நாயன்மார்குளம், ஆனந்தன் வடலி வீதி வரை | 500/- | 100/- | 100,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1989 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை பகல் 12.00 மணி வரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
21 - 06 - 1989

[சி-2899]


# சமுதாயக் கல்வி வளர்ச்சி பாலர் கல்வியில் தங்கியுள்ளது

### மல்லாகம் விளையாட்டுப் போட்டியில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 25 இன்றுள்ள நிலையில் பாலர் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து சர்வோதய அமைப்பு கிராமங்கள்தோறும் பாலர் பாடசாலைகளை அமைத்துவருகிறது. எம் சமுதாயத்தில் ஆரம்பக் கல்வியாக விளங்கும் பாலர் கல்வி நல்ல முறையில் அமைந்தால்தான் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியுறும். கல்லூரிகள் போன்று பாலர் பாடசாலைகளையும் நாம் மதிக்கவேண்டும்.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா மல்லாகத்தில் இடம்பெற்ற பாலர் பாடசாலை மாணவர்களிடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மல்லாகம் சன்மார்க்க சன சமூக நிலையத்தில் இயங்கும் சன்மார்க்க பாலர் பாடசாலை பாலகர்களும், அளவெட்டி பாரதி பாலர் பாடசாலை பாலகர்களும் கலந்துகொண்ட இவ் விளையாட்டுப் போட்டி குளமங்கால் றோ. க. பாடசாலை மைதானத்தில் சர்வோதய நிறுவன போதனாசிரியை திருமதி இந்திராதேவி குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

மல்லாகம் இ. மு சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் குளமங்கால் றோ. க. பாடசாலை அதிபர் திரு. மரியதாஸ் தெல்லிப்பழை போதனாசிரியை செல்வி யோகராணி நடேசப்பிள்ளை, பெ. தனராசா, செல்வி சு. சிவப்பிரகாசம், வி நடராசா ஆகியோர் உரையாற்றினர்கள்.

பாலர் பாடசாலைப்பொறுப்பாளர் செல்வி சாரதா சுப்பிரமணியம் வெற்றியீட்டியோருக்குப்பரிசில் வழங்கினர். (இ-3)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**திரு. அன்ரன் இம்மானுவல் எதிர்மனசிங்கி**

(யாழ். கதீற்றல் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர், மேற்கு ஜேர்மனியில் காலமானார்.)

மலர்வு: 17. 06. 1924 — உதிர்வு: 27. 05. 1989

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

இவரின் ஆத்மா சாந்தியடைய நாளை திங்கட்கிழமை புனித. யுவானியார் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்

மனைவி: எலிசி அன்ரன் [மேற்கு ஜேர்மனி]
பிள்ளைகள்: பிறைற்றன், இன்பா, றேகான், றஞ்சன், [மேற்குஜேர்மனி] மற்றும் உறவினர்கள்.

M. L. C. EDIRMANASINGHE,
(Brightan)
GERLACHWEG 1,
4600, DORTMUND 15,
WEST GERMANY.

(11355)



## L.M.L. வெஸ்பா பாவனையாளருக்கு

# ஓர் முக்கிய அறிவித்தல்

எமது யாழ்ப்பாண முகவர்:

**V. K. இராசரத்தினம்**

மட்டும் தான்.
வேறுமுகவர்கள் எமக்கு இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.

SWIFT WHEEL PVT LTD
331- UNION PLACE,
COLOMBO - 2

இப்பொழுது புதிய மொடல்
L. M L. வெஸ்பா - T 5
கையிருப்பில் உண்டு.

**V. K. இராசரத்தினம்**
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(2897)



# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

மண்ணுலகம்: 05-7-1904 — விண்ணுலகம்: 25-6-1984

அன்புடன் எவர்க்கும் அருள் மொழி கூறியே
நன்னெறி காட்டும் ஞானியாகத்
''திருமுருகாற்றுப் படையினைத்'' தினமும்
ஓதி உணர்ந்து உலகில் பலரும்
பயன் பெற வாழ்ந்த பண்பினை
நின் நினைவே துணையாய் நின்னையே எண்ணி
வாழ்கிறோம் வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


45, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(11354)



# சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

# 'அர்ச்சுனா' — மே-ஜூன் இதழ்




மாத இதழ் ரூபா 4. 00 — ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

காசோலை அல்லது காசுக்கட்டளை ''நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' என்று எழுதப்பட்டு ''அர்ச்சுனா'' த. பெ. எண். 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(C/2888)



# திறனாய்வு நிலையம்

### அறிவியற் சேவையின் பரீட்சைப் பகுதி

### G.C.E. (A/L) பயிற்சி பரீட்சைகள் ஜூலை 1989

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

✶ பரீட்சைக் கட்டணம்:
நான்கு பாடங்களுக்கு ரூபா 50/-
பாடமொன்றுக்கு ரூபா 15/-

✶ பரீட்சை நடத்தப்படும் பாடங்கள்:

✶ தூயகணிதம் ✶ தமிழ்
✶ பிரயோககணிதம் ✶ இந்து நாகரிகம்
✶ இரசாயனவியல் ✶ அளவையியல்
✶ பௌதிகவியல் ✶ வர்த்தகம்
✶ தாவரவியல் ✶ கணக்கியல்
✶ விலங்கியல் ✶ பொருளியல்
✶ புவியியல் ✶ இஸ்லாமிய நாகரிகம்
✶ அரசியல்

✶ பரீட்சைக்கு தோற்றவிரும்பும் மாணவர்கள் தாம் விரும்பும் கல்வி நிலையங்களூடாக விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களும் விண்ணப்பிக்கும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.


★ நேரடியாக விபரங்களைப் பெற விரும்புவோரும், விண்ணப்பிக்க விரும்புபவரும் கீழேயுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

த. பெ. இல. 81,
யாழ்ப்பாணம்.

(982)



# அந்தியேட்டி அழைப்பு



**திரு. இ. தவநேசன்**

தோற்றம்: 08 - 10 - 1951 — மறைவு: 13 - 05 - 1989

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 26 - 6 - 89 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

குராவத்தை,
சுன்னாகம்.

(11352)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நாட்டுக்கூத்துப் பற்றி விரிவான ஆய்வு வேண்டும்!

-- பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் --

ஈழத்துத் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய பண்பாகத் திகழ்வது நாட்டுக் கூத்தாகும். ஈழத்தமிழருடைய நாட்டுக்கூத்துக்கெனத் தனியானதொரு வரலாறே உண்டு. அவ்வரலாற்றினையும் சுருக்கமாக இச்சந்தர்ப்பத்திலே நோக்குதல் நன்று. மேலைத்தேயக் கலாசாரக் கூறுகள் சில நம்பிரதேசத்திலே பரவும் முன்னர், நாடகம் என்றால் நாட்டுக்கூத்தாகவே இருந்தது. இக்கூத்து ஆடல் மரபினையும், பாடல் மரபினையும் தன்னகத்தே கொண்டதாக அமைந்தது. இத்தகைய கூத்துக்கள் யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலே ஆடப்பெற்றன.

கிறிஸ்தவ சமயம் இங்கு பரவியபொழுது, கிறிஸ்தவ சமயக் குருமார்கள் தமிழர் பிரதேசங்களிலே மேடையேற்றப்பட்ட நாட்டுக் கூத்துக்களைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பெருந்திரளாக மக்கள் இரவிரவாக இக்கூத்துக்களைப் பார்த்துக் களிப்பதைக் கண்ட அவர்கள் இக்கூத்துக்கள் மூலமாகத் தம்முடைய மத போதனைகளை மக்களிடையே பரப்புதல் இலகுவெனக் கண்டனர். ஆனால், அன்று தமிழர் பிரதேசங்களிலே ஆடப்பட்ட கூத்துக்களின் கதைப்பொருள் இந்துப் புராண இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அத்துடன் அவை ஆடல் மரபினையுடையனவுமாயிருந்தன.

கத்தோலிக்ககுருமாருடைய ஊக்கத்தின் பேரில், அச்சமயத்தைச் சார்ந்த பல புலவர்களும் கலைஞர்களும் தென்மோடிப் பாங்கிலே யாழ்ப்பாணத்திற் பல நாட்டுக் கூத்துப் பிரதிகளை எழுதினர். அவர்களுடைய சமய நெறிக்கேற்ப ஆடல் மரபினைக் கைவிட்டு, திருமறையுடன் தொடர்புடைய கதைகளைக் கூத்துக்களுக்குப் பொருளாகக் கொண்டனர். இம்மரபிலே வந்தவர்தான் கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்கள்.

> நாளை 26 ஆம் திகதி திங்கட்கிழமை கரம்பொன் மெலிஞ்சி முனையில் அந்தோனி அண்ணாவியார் நினைவு விழா நடைபெறுகின்றது. இதனை ஒட்டி வெளியிடப்படும் நினைவு மலரில் வெளியாகும் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

திருமறையிலே இடம்பெறும் தாவீது - கொலியாத் கதை ஆசிரியரால் நாட்டுக் கூத்து வடிவம் பெற்றது. புனித தொம்மையர், புனித கிறிஸ்தோப்பர், புனித செபஸ்தியார் ஆகிய இறையடியார்களுடைய வரலாறுகளும் இவ்வாசிரியர் கைவண்ணத்தால் நாட்டுக் கூத்துக்களாயின.

மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் எழுதப்பட்ட கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களுட் பெரும்பாலானவை தென்மோடியைச் சேர்ந்தன. யாழ்ப்பாணத்துத் தென்பாங்கு நாட்டுக் கூத்துக்கள் பற்றி எவரேனும் விரிவாக ஆராயவில்லை என்றே கூறலாம். அவற்றின் பண்புகள் பற்றிய விளக்கங்கள் விரைவிலே வெளிவரவேண்டும். மன்னார்த் தென்மோடிக் கூத்துக்களெல்லாம் ஆடற் பண்புடையன. ஆனால் யாழ்ப்பாணத்துத் தென்மோடிக் கூத்துக்களெல்லாம் ஆடற்பண்புடையனவாக இருந்தன என்று கூறமுடியாது. எனினும் ஆடலுக்கு அடிப்படையான தாளலயம் அக்கூத்துக்களிலே உண்டு.

யாழ்ப்பாணத்துத் தென்மோடிக்கூத்துக்களிலே நடிப்பு முக்கியத்துவம் பெற்றது. அத்துடன் பாடல்களுக்கும் இக்கூத்துக்களிலே சிறப்பிடமுண்டு. ஆடற் பண்புடைய தென்மோடிக் கூத்துக்கள் வட்டுக்கோட்டையிலே ஆடப்பட்டு வந்துள்ளன.

யாழ்ப்பாண நாட்டுக்கூத்துப்பற்றி ஆராய்பவர்கள் பின்வரும் விடயங்களைத் தம்கருத்திலே கொள்ளவேண்டும்.

(1) வடமோடி தென்மோடி என்ற பாகுபாடு என்ன அடிப்படையிலே யாழ்ப்பாணக் கூத்துக்களுடன் தொடர்புற்றன?

(2) வடமோடி தென்மோடி என்றால் என்ன? யாழ்ப்பாணக் கூத்துக்களை ஆதாரமாகக்கொண்டு நோக்குதல்.

(3) ஆடற்பண்புடைய கூத்துக்கள் - ஆடற்பண்பற்ற கூத்துக்கள் என்ற பாகுபாடு என்ன வகையிலே யாழ்ப்பாணக் கூத்துக்களுக்குப்பொருந்தும்?

(4) யாழ்ப்பாணக் கத்தோலிக்கக் கூத்துக்களின் தனித்துவம் என்ன?

யாழ்ப்பாணக் கூத்துக்கள் பற்றி விரிவான ஆய்வு வெளிவரும்போது நாட்டுக் கூத்துக்களை எழுதிய புலவர்களின் திறன்களும் விரிவாகப் பேசப்படும். அப்பொழுது கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்களுடையபெயரும்விளக்கம் பெறும். தமிழ்க்கலைஞன் ஒருவனைத் தமிழ் மக்கள் இன்னும் மறக்கவில்லை என்பதற்கு இம்மலர் சாட்சியாக அமைகின்றது. ★

## இதயவாசலைத் திறந்து விடுங்கள்

'என்னை யாரும் அன்புடன் நடத்துவதில்லை' என்ற ஒரு குறையைப் பலர் அடிக்கடி சொல்லுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். உலகத்தில் அன்பு எங்கும் நிறைந்திருக்கிறது. ஆனால் அது வெள்ளமாக வந்து பாய்வதற்கு நாம் தான் மனத்தைத் திறந்து வைப்பதில்லை.

நம்முடைய இதயவாசல் எப்போதும் மூடியே கிடக்கிறது. பின் அதில் நல்ல உணர்வுகள் எங்கிருந்து வந்து புகுந்து கொள்ள முடியும்?

அந்த வாசலை நீங்கள்தான் உள்ளே தாழ்ப்பாள் போட்டு வைத்திருக்கிறீர்கள். வெளியில் இருந்து தாழ்ப்பாள் போட முடியாது. ஆகையால் அதை நீங்கள் தான் உள்ளேயிருந்து திறந்து வைக்கவேண்டும். ★

## உலகப் பிரதம சாரணியின் 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சாரண இயக்கத்தை நிறுவியவரும் உலகின் பிரதம சாரணருமான கில்வெல் றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன்பவல் பிரபுவின் அருமைப்பாரியாரே சீமாட்டி ஒலேவ் பேடன் பவல் அம்மையார் ஆவார். இவரின் யுவதிப் பெயர் செல்வி ஒலேவ் சென்ற் கிளேயர் சோம்ஸ் ஆகும்.

ஒலேவ் அம்மாள் 1889 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியும், பேடன் பவல் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதியும் பிறந்தனர். இவ் வருடம் பெப்ரவரியில் ஒலேவ் சீமாட்டியின் 100 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினோம்.

டபிள்யூ. என். தேவகடாட்சம் ஏ.எல்.ரி
முன்னாள் உதவி மாவட்ட சாரண ஆணையாளர், யாழ்ப்பாணம்

இன்று (26. 06. 1989) 12 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலியையும் செலுத்தி சர்வதேச சாரணியர் றேஞ்சர்ஸ், சிறு தோழர் விசேடமாக நினைவு கூருகின்றனர்.

அத்துடன் சாரணர், கடற் சாரணர், குருளைச் சாரணர், ஆகாயச் சாரணர், சிரேஷ்ட சாரணர் யாவரும் சேர்ந்தும் சாரண இயக்கத்தை ஆரம்பித்தவரும் உலகின் பிரதம சாரண இயக்கத்தை ஆரம்பித்தவரும் உலகின் பிரதம சாரணருமான கில்வெல் பேடன்பவல் பிரபுவின் அருமைப் பாரியார் என்ற முறையிலும் நினைவஞ்சலி செய்கின்றனர்.

பேடன்பவல் 1920 ஆம் ஆண்டு உலகப் பிரதம சாரணராகத் தெரிவு செய்யப்பட்டது போன்று ஒலேவ்சீமாட்டி 1930 ஆம் ஆண்டு உலகப் பிரதம சாரணியாகத் தெரிவு செய்யப்பட்டார். இருவரும் முறையே சர்வதேச இளைஞர், யுவதிகள் இயக்கங்களுக்குச் சிறந்த தலைமைத்துவமுடைய முன்மாதிரியான தலைவர்களாகச் சிறந்த பணி புரிந்தனர்.

பேடன் பவல் பிரபு 1941 ஆம் ஆண்டு 83 வயதிலும் ஒலேவ் சீமாட்டி 1977 ஆம் ஆண்டு 88 வயதிலும் தங்கள் சீவிய ஓட்டத்தைத் திறம்பட ஓடி முடித்தனர்.

1910 ஆம் ஆண்டு பேடன் பவல் பிரபு அவரின் சகோதரியின் உதவியுடன் சாரணியர் (வழிகாட்டிகள்) இயக்கத்தை ஆரம்பித்தார்.

1912 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலகத்தின் பல பாகங்களுக்கும் சாரண இயக்கப் பிரசாரப் பிரயாணத்தை மேற்கொண்டு அங்குள்ள அனேக சாரணர்களைச் சந்தித்தார்.

இலங்கைக்கு இவ்விருவரும் 1921 ஆம் ஆண்டு முதல் தடவையாகவும், பின் 1934 இல் கடைசி முறையாகவும் விஜயம் செய்தனர். 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதி ஒலேவ் சீமாட்டி அவரது செயலாளருடன் யாழ்ப்பாணத்துக்குசாரணிகளின் மாபெரும் சாரணிகள் விழாவில் யாழ். முற்ற வெளியில் கலந்து கொண்டு விசேட செய்தியை வழங்கினர். நானும் அவ் விழாவில் கலந்து கொண்டு ஒலேவ் சீமாட்டியைச் சந்தித்து அறிமுகம் செய்ய ஒரு தருணம் கிடைத்தது மிக மகிழ்ச்சிக்குரிய நினைவுச்செயல் ஆகும். ★


## பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

எமது வைத்தியசாலையின் தளபாடங்களுக்குரிய பின்னல் வேலைகளைச் செய்வதற்கான கட்டண விபரங்கள் கோரப்படுகின்றன. முழுவிபரங்களையும் இப்பணிமனையின் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்,

விண்ணப்பங்கள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ 1989 - 07 - 05 ஆம் திகதிக்கு முன்பு எமக்குக் கிடைத்தல் வேண்டும்.

எஸ். சிவலிங்கம்
கணக்காளர்.

பொதுவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
1989 - 06 - 23.

(C/2725)


## சத்திரசிகிச்சை வெற்றி அளிக்க நோயாளியின்ஒத்துழைப்பு அவசியம்

சத்திர சிகிச்சையால் ஏற்படும்விளைவுகள் சிலவற்றைத் தடுக்கவும் குறைக்கவும் இவ்வாறுசிகிச்சைசித்தியடையவும் அறுவையிலும் (Operation) பார்க்க முன் ஆயத்தங்களும், பராமரிப்பும் (Pre Operatuie preparation) பின் பராமரிப்பும் (Post-Operative care) மிக முக்கியமானவை. இவற்றால்தான் அபாயங்கள் ஏற்படாமல் அல்லது மிகக் குறுகிய அளவில் ஏற்பட வழி வகுக்கலாம். முக்கியமான விளைவுகள் யாதென்றும், பராமரிப்பு யாதென்றும் இவற்றில் நோயாளியின் ஒத்துழைப்பு எவ்வளவு முக்கியம் எனவும் கவனிப்போம்.

> யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரால் எழுதப்பட்ட இக்கட்டுரையின் முதற்பகுதி 11- 06- 89 உதயனில் வெளிவந்தது.

விளைவுகள் சத்திர சிகிச்சையால் ஏற்படுவனவாயிருக்கலாம், உணர்வழிப்பு முறைகளாலும் ஏற்படலாம்.

விளைவுகளில் (Complication) மிக முக்கியமானவை.

(அ) நுரை ஈரல் சம்பந்தப்பட்டவை. [Resrpiratory-Complication]

(ஆ) இருதயம் சம்பந்தப்பட்டவை. (Cardiac Complications)

(இ) உடல்நீர், இரசாயனப் பொருள்கள் நிலைமாற்றம் (Fluid and electrolyte-Imbalance).

(ஈ) சிறுநீரகம் சம்பந்தப்பட்டவை. (Renal Complications.

(உ) கிருமித் தாக்கம் (அழுகற் குருதிமை) (Septicaeima)

(ஊ) இரத்தம் கசிதல் (Haemorrage).

இவ் விளைவுகள் பருமன் கூடியவர்களில், (Obese) புகைப்பவர்களில், ஏற்கனவே இரத்தச் சோகை, நீரிழிவு வருத்தம்' நுரை ஈரல், இருதயம், சிறுநீரகம், கல் ஈரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களில் கூடிய விகிதத்தில் ஏற்படக்கூடும். இவ்விளைவுகளைத் தடுக்கப் பல முறைகள் கைப்பற்றப்படு . எனினும் தடுப்பு முறைகள் முற்றாகக் கைப்பற்றச் செல்லும் நேரத்துக்கு முன்பு நோயாளி கட்டாயமாக (சத்திர சிகிச்சை அவசரம் [illegible]) மரணமடையக் கூடுமானால் அபாயத்தை ஏற்[illegible] (Calculated Risk) சிகிச்சை மேற்கொள்ளப்படும். இது நோயாளியின் நலன் கருதியே.

முன் பராமரிப்பில் (சத்திர சிகிச்சை தாமதப்படலாம் என்றால்) பின்கூறிய நிலைகளை சோதித்து, தேவைப்பட்டால் (மாற்றங்கள் இருந்தால் நிவர்த்தி செய்யப்படும்) (அ) மனநிலை (ஆ) இரத்த அளவு (இ) சீனி அளவு (ஈ) உடல் நீர். இரசாயன பொருள்நிலை (உ) நுரை ஈரல் இருதயம், சிறு நீரகம், கல் ஈரல் செயல்பாடு நிலை (ஊ) கிருமி உறைவு (Septic focus)

பருமனைக் குறைத்து, சிகிச்சைக்குக் குறைந்தது இரு தினங்களுக்கு முன்பு, புகைத்தல் நிறுத்துவது, சில விளைவுகளைத் தடுக்கும். கிருமி உறைவு இடங்கள் (உதாரணம்: சூத்தைப் பல்) சுத்தப்படுத்தப்படும் அல்லது நுண்ணுயிர் எதிரிகள் கொடுக்கப்படும். பிரதானமாக, முழு உணர்வழிப்பு அளிக்கப்படுவோருக்கு சுவாசப் பயிற்சி அளிக்கப்படும். முன்கூறிய படி மாற்றங்கள் ஏதாவது இருந்தால் அவை நிவர்த்தி செய்யப்படும்.

மயக்க மருந்து கொடுத்து முழு உணர்வழிப்பு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சையினால் 5 மணித்தியாலங்களுக்கு முன்பிருந்து ஒன்றும் சாப்பிட - குடிக்கக் கூடாது. ஏனெனில் இரைப்பை காலியா இல்லாவிடின் மயக்க மருந்து கொடுக்கும்பொழுது கள — இரைப்பை சந்தியிலுள்ள இறுக்கி (Sphineter) இளகி உணவு, திரவம் தொண்டையை அடைத்து சுவாசக் குழாய் மூலம் ஈரல்களை அடைத்து ஆபத்தை விளைவிக்கலாம்; உடனே தப்பினாலும் பின்பு நியூமோனியா ஏற்பட்டு ஆபத்தை ஏற்படுத்தலாம். சிலர் (இனத்தவர்கள்) ஒன்றும் அருந்தக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லியும் நோயாளி பாவம் என்று கள்ளமாகக் கொடுத்து, ஆபத்தை விளைவிக்கிறார்கள். 5 மணித்தியாலங்களுக்கு முன்பு அவசர சிகிச்சை செய்யவேண்டுமானால், நுரை ஈரலுக்குள் உணவுத் திரவம் உட்படாமல், நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பின்பராமரிப்பில் கூறப்பட்ட விளைவுகள் ஏற்படாமல், நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதில் நோயாளி [illegible] சுவாச அப்பியாசங்கள். இரு[illegible] வாறு ஊக்கத்துடன் செய்வதால் நியூமோனியா, நுரை ஈரல் சுருங்கல் முதலிய விளைவுகளைத் தடுக்கலாம். கால்களை கால் விரல்களை அசைப்பதால் கூடிய அளவு நீர் உட்கொள்வதால் (வைத்தியர் வாய் மூலம் எடுக்கலாம் என்று சொன்னால் மாத்திரம்) கால் நாளங்கள் இரத்தம் உறைந்து இரத்தக்கட்டி நுரை ஈரல் நாளங்களை அடைந்து ஏற்படுத்தும் ஆபத்தை தவிர்க்கலாம், எவ்வளவு சீக்கிரம் கட்டிலால் இறங்கி, எவ்வளவு நேரம் அசைந்து திரிகிறோமோ அவ்வளவுக்கு நுரைஈரல் பாதிப்புகள் மார்படைப்புகள் முதலியவற்றைத் தடுக்கலாம். சில நோயாளிகள் இனத்தவர்களின் அனுதாபத்தை நாடி மூடத்தனமாக "நோகுது, நோகுது" என்று சொல்லி, கட்டிலில் அசையாமல் இருந்து, விளைவுகளைத் தேடிக் கொள்வார்கள். இது புரிந்து கொள்ளக் கூடியதானாலும் கண்டிக்கப்பட வேண்டியது. இரசாயனப் பொருட்களில் பொற்றாசியம் (மக்னீசியமும்) மிக முக்கியமானது. இதன் அளவு ஆகக் குறைந்தால் அல்லது ஆகக் கூடினால் (சிறு நீரகத் தளர்ச்சி ஏற்பட்டு) மரணம் ஏற்படலாம். பின் பராமரிப்பில் நாம் இதை கவனிப்போம். எனினும் நோயாளிக்கு பொற்றாசியம் உள்ள பொருட்கள் (பால், பழங்கள், இளநீர்) உட்கொள்ளச் சொன்னால் இதை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டும்.

இவ்வளவு அம்சங்கள் (கவனிக்க வேண்டிய) இருக்கும் பொழுது ஆயிரத்தில் ஒரு நோயாளி தவறலாம். இதனால் மக்கள் சத்திர சிகிச்சை பெறத் தயங்கக்கூடாது. வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளும் போதும் இப்படி நடப்பது தெரிந்ததே.

சத்திரசிகிச்சை பெற்று வீடு செல்வோர் குறிப்பிட்ட நாட்களில் கிளினிக் செல்ல வேண்டும். சத்திர சிகிச்சையின் பின் தாமதமான விளைவுகள் சிலரில் ஏற்படக்கூடும். உதாரணமாக: காயத்தில் சீழ் ஏற்படுதல், அங்கம் குறுகுதல் (Contraction), இரத்த சோகை, இரத்தக் கட்டி ஏற்படுதல், இரசாயனக் குறைவு போன்று பல. இவற்றை நேரகாலத்தில் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதே சிறந்தது. எனவே மக்கள் கிளினிக்குக்கு வரத் தயங்கக் கூடாது' (முற்றும்)

## வாசகர் திருமுகம்

### குடி தண்ணீர்ப் பிரச்சினை

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த வேளாதோப்பு என்ற கிராம மக்கள் குடி தண்ணீர்க்காக அலைந்துதிரியும்காட்சிநாளாந்தம் கவலை தரும்ஒருவிடயம்.

இக் கிராமத்தில் இதனை அண்டியகட்டைப்பிராய் நல்லூர்கலைமகள்வீதி, விநாயகர் வீதி, ஆகிய வீதிகளிலும் வசிக்கும் சுமார் 300 குடும்பங்கள் குடி நீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் வெளிநாட்டு உதவியுடன் பல நீர் விநியோகதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இக்கிராமத்துக்கான ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ குறிக்கப்பட்ட சபைகளோ நடவடிக்கைஎடுக்கவில்லை.

சம்பந்தப்பட்ட யாழ்ப்பாண பிரதேச சபை மூலம் கோப்பாய் உப அலுவலகத்தினர் இவ்விடயத்தில்கூடியஅக்கறைகாட்டி நன்னீர் விநியோகத் திட்டம்ஒன்றைசெயற்படுத்த வேண்டுமென வேண்டுகின்றேன்.

வேளாதோப்பு
வே. ம. இந்திரநாதன்

### வீதியின் அவல நிலை

யாழ்ப்பாணம் 1 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு முன்னால் குப்பைகள் நிறைந்துள்ளமையினாலும், நீரோட்டக்கான்கள் அசுத்தமாக இருப்பதனாலும், வீதியோர மின்விளக்குகள் இல்லாதிருப்பதனாலும் மக்களின் சுகாதாரம் பாதிப்படைகின்றது. எனவே சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

கோட்டை ஜும்ஆப்பள்ளி வாசல்
யாழ்ப்பாணம். முன்னேற்ற மன்றம்.

## ஓவியங்களும் சிற்பங்களும் உயிருடன் அமைய வேண்டும்

### இளங்கலைஞரின் அபிப்பிராயம்

மகோன்னதமான ஓவியங்களையும் சிற்பங்களையும் கலாசாரம் குன்றாது உருவாக்க வேண்டும் என்பது எனது ஆசை. ஓவியங்கள் உயிரோவியமாக இருக்கவேண்டும். சிற்பங்கள் தத்ரூபமாக இருக்க வேண்டும்.

'மொடோண் ஆர்ட்' என்ற பெயரில் எமது சிறப்பான கலைப் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் குழிதோண்டிப் புதைப்பதை நான் அறவே வெறுக்கின்றேன். சித்திரங்களை வரையும் போது அவற்றில் உயிர் இருக்க வேண்டும். சிற்பக்கலையும் அவ்வாறேதான்.

இவ்வாறு கூறுகின்றார் இளம் ஓவியக்கலைஞர் செல்வன் அ. சதீஸ். ஓவியங்களைத் தீட்டிவரும் சதீஸ் சிற்பக் கலையிலும் வல்லவர்.



செல்வன் அ. சதிஸ்

சிறு வயதிலிருந்தே எனக்கு இதில் மிக ஆர்வம் விஸ்வகர்ம குலத்தவர்கள் கவின் மிகு கலைகள் பலவற்றிலும் பொதுவாகச் சிறப்புற்று விளங்குவதுண்டு. இயற்கையாகவே கலை அம்சம் பொருந்திய குடும்பத்தில் பிறந்த நான் ஓவியக்கலையை விரும்பிக்கற்றேன். எனது தந்தையார் திரு. அரசரட்ணம் ஒரு தலை சிறந்த ஓவியர்.

சித்திரம் தீட்டுவதில் சிறந்த தேர்ச்சியுடையவராதலில் நானும் அவருடன் சேர்ந்து ஓவியங்களை வரைய ஆரம்பித்தேன். சிறு பராயத்திலேயே இத்துறையில் நான் தூண்டப்பெற்று என்னை இதில் நன்கு ஈடுபடச்செய்த பெருமை எனது தந்தையாருக்கே உரியது.

இவ்வண்ணம் பெருமையோடு கூறிக்கொள்ளும் சதீஷிடம் எப்படி இதிற் சிறப்புற்று விளங்குகின்றீர்கள் எனக் கேட்டபோது - இப்போது கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகக் கடமையாற்றும் திரு கதிரவேலுவிடம் ஓவியக்கலையின் நுணுக்கங்களைக் கேட்டு அறிந்தேன். மேலும் - கமத்தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய திரு. திருச்செல்வம் என்பவரிடமும் சிற்ப ஓவிய நுணுக்கங்களையும், நல்லூரைச் சேர்ந்த திரு. பத்மநாதனிடம் சில முக்கியமான நெளிவு சுளிவுகளையும் கேட்டறிந்து சித்திர நுணுக்கத்தைக் கற்றுக்கொண்டேன். அவரோடிணைந்தும் சில ஓவியங்களைச் சிருஷ்டித்துள்ளேன்.

> செல்வன் சதீஷின் சிறப்பு ஓவியக் கண்காட்சி ஜூன் 30, ஜூலை 1, ஜூலை 2 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதையொட்டி இப்பேட்டி பிரசுரமாகின்றது

பன்னிரண்டு வயது முதல் சொந்தப் படைப்புகளை உருவாக்கத் தொடங்கிய செல்வன் சதீஸ் நூற்றுக்கு மேற்பட்ட சிற்பங்களையும் ஐநூற்றுக்குமேற்பட்ட ஒப்பற்றஓவியங்களையும் படைத்துள்ளார்.

கிளிநொச்சி குருகுலத் தலைவர் காலஞ்சென்ற கதிரவேலுவின் உயிரோவியம் அவருக்கு மிகுந்த பாராட்டைப் பெற்றுக்கொடுத்தது. சிற்பக்கலையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அங்கு கடமையாற்றி இளைப்பாறிய ஒருவருக்கு அவர்தம் சகஊழியர்களால் அன்பளிப்பாக வழங்குவதற்கென உருவாக்கப்பெற்ற மரத்தினாலான ஒரு தட்டம் பலரது புகழ்ச்சியையும் சிறப்பையும் சதீஸுக்குக் கிடைக்கச்செய்தது. இது முழுவதும் அழகிய சிற்ப வேலைப்பாடுடையது.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்துக்கு செல்வன் சதீஸ் உருவாக்கிக் கொடுத்த ஒரு கேடயம் மிகுந்த கலையம்சம் பொருந்திய ஒன்று. இலங்கையில் கொத்தணிப் பாடசாலைகளுக்குச் செய்யப்பட்ட முதலாவது கலைக் கேடயமாக அது மிளிர்வதுடன் சிறு வயதிலேயே மதிப்பும் மரியாதையும் பெற்றுத் தந்த புகழ்மிக்க கேடயம் என்கிறார் செல்வன் சதீஸ்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்செய்த அர்த்தநாரீஸ்வரர்சிலை அருமையிலும் அருமை. சிறந்த சிற்பப் படைப்பு. சதீஸின் கவின் மிகு கலைத்திறன் இங்கே நன்கு பரிணமிக்கிறது.

இந்தக் கலையைத் தான் மாத்திரம் கற்றதோடு நில்லாமல் தனது தங்கைக்கும் கற்றுக் கொடுத்து — அவரையும் தனக்கு ஒத்தாசையாக உருவாக்கி வருகின்றார். சதீஸின் ஓவியச் சிறப்பை நடைபெறவிருக்கும் ஓவியக் கண்காட்சி நிச்சயம் காட்டி நிற்கும்என்பதில் சந்தேகமில்லை. ★

பேட்டி: இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எக்ஸ் - கதிர் இயந்திரம் திருத்தப்பட்டது

யாழ் பெரியாஸ்பத்திரியில் பழுதடைந்த எக்ஸ் – கதிர் இயந்திரம் காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட் பொறியியலாளர்களினுல் திருத்தி அமைக்கப்பட்டது.
பிரஸ்தாப இயந்திரம் கடந்த 16 ஆம் திகதி முதல் நோயாளருக்காக இயங்கிவருகிறது. (ச-ச)

## வரவு குறைந்தாலும் பாடசாலை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25
மாணவர் வரவு குறைவு என்ற காரணத்துக்காக பாடசாலைகளை மூடிவிடும் எண்ணம் கல்வி அமைச்சுக்கு இல்லை என்று துணை அமைச்சுச் செயலாளர் கேர்ணல் வி. எஸ். குடலிகம சொன்னுர்.
மாணவர் வரவு குறைவு என்றுலும் வழமையான கடமைகளை மேற்கொள்ளும்படி பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. குடலிகம தெரிவித்தார். (க-எ)

## இரத்த வங்கியில்

யாழ்ப்பாணம் ஜூன் 25
யாழ் இரத்த வங்கியில் பல லட்சம் ரூபா செலவில் பொருத்தப்பட்ட இரத்தப் பகுப்பாய்வுக் கருவியை இயக்க தொழில் நுட்பவியலாளர் வந்ததை அடுத்து அக்கருவி இயங்க ஆரம்பித்துள்ளது. (க-3)

## பயிற்சி பெருத பட்டதாரி ஆசிரியர்கள்
# டிப்ளோமாக் கல்வி பெற
## கல்வி விடுமுறை

தற்போது பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி பெருத 23 ஆயிரம் டிப்ளோமா கல்வியைப் பெற கல்வி விடுமுறை வழங்க கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்கிறுர்.
கொழும்பு, பேராதனை அல்லது யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் இந்த 23 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களும் தொகுதி, தொகுதியாகப் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தன்னைச் சந்தித்த இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுத் தூதுக்குழுவிடம் தெரிவித்தார். (க-எ)


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் – பின் -



சேவை ஒழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின் தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிரமாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.
கிடைக்கும் ரகங்கள் –
12" மற்றும் 14" கறுப்பு/வெள்ளை; 14" வர்ணம் (ஸ்டீரியோ) மற்றும் (மொனிட்டர்); 16" வர்ணம்; 20" வர்ணம்,
விலை, குறைந்தது ரூ. 4,390/- முதல்.

# சிங்கர் தொலைக்காட்சி

உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


## திறந்து வைத்தார்

ஒட்டுசுட்டான், ஜூன் 25
முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கத்தின் மற்றும் ஒரு கிளை கூளாமுறிப்பு என்னும் இடத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இக்கிளையை ஒட்டுத் தொழிற்சாலை முகாமையாளர் திரு. பீ. வரதராசா திறந்து வைத்தார். (ச-113)

## மறுவாழ்வுத் திட்டம்

வடமராட்சி, ஜூன் 25
வடமராட்சியில் இராணுவத் தாக்குதலால் சணவனை அல்லது தந்தையை இழந்வர்களுக்கு ஈரோஸ் இயக்கமேற்பார்வையில்இயங்கும்சாந்தன் மின் நெசவு நிலையம் மறுவாழ்வுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவுள்ளது.
பாதிப்புக்குள்ளான பெண்களுக்கு தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அது ஏற்படுத்த நடவடிக்கைகள்எடுக்கின்றது.
இப் பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் இம்மாதம் 25 ஆம் திகதியளவில் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-160)

## நெடுங்கேணியில் தேடுதல்

நெடுங்கேணி, ஜூன் 25
நெடுங்கேணியில் பதற்றநிலை நிலவுகிறது வர்த்தக நிலையங்களும், அரசதிணைக்களங்களும், காலையில் திறந்திருந்தாலும் மாலையில் மக்கள் நடமாட்டம் எதுவுமே இல்லை.
நெடுங்கேணியின் அயல் கிராமங்களான மாமடு, பழம்பாசி, தண்டுவான், மாருயிலுப்பை, குளவிசுட்டான், வேலங்குளம், குறிசுட்டகுளம் ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின், தேடுதல் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. (108)

## மதிய உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 25
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
கோண்டாவில் கிழக்கு அற்புத நந்தனவிஞயகபரிபாலன சபைத் தலைவர் திரு. பே. சரவணமுத்து அதனை ஆரம்பித்து வைத்தார்.
தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் அதிபர் பொ. கதிர்காமநாதன், ஆசிரியர் திரு. த. நடராசா, கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாசிரமத் தலைவர் திரு. வே. சி. பத்மநாதன் ஆகியோர் உரையாற்றினுர்கள.
பா. அ. ச. செயலாளர் திரு. பே. இராசரத்தினம் நன்றி உரைவழங்கினுர்.
பாடசாலையில்உணவுசமைப்பதற்காக மூவாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான பாத்திரங்களைக்கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் அன்பளிப்பாக வழங்கினுர்கள். (க)

## பயிற்சி

மட்டக்களப்பு, ஜூன் 25
மட்டக்களப்பு மாவட்டத்தில் ரிசேர்வ்பொலீஸ் நியமனம் பெற்றுள்ள 840 இளைஞர்களுக்கு பொலீஸ் நிலையங்களில் தற்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.
ஒருமாதகால பயிற்சியுடன் பின்பு இவர்களுக்கு பொலீஸ் நிலையங்களில் நியமனம் வழங்கப்படும்.
அதே நேரம் ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேருவதற்கான நேர்முகப்பரீட்சை ஒன்றும் கல்லடி முகாமில் நடைபெற்றது. (ச- 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

**பொருள்:**

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒருதன்மையானதே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.


# உதயன்

இல: 362/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24806, 23075

25 - 06 - 1989 தொ: பெ: இல: 38


## நெருங்கி வரும் நெருக்கடி!

தென்னிலங்கையில் மக்களின் நாளாந்த வாழ்க்கை தினமும் மேன்மேலும் சீர்கெட்டு வருகிறது. அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியச் சேவைகள் பலவும் ஸ்தம்பித நிலைக்கு வந்துவிட்டன.

போக்குவரத்துச் சபைகளின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். இப்போது துறைமுகத் தொழிலாளர்களில் பலர் வேலைக்குச் செல்வதில்லை. ஆஸ்பத்திரிகளிலும் சேவைகள் பாதிக்கப்பட்டுவிட்டன. ரயில்வே பகுதி, தபால் தொலைத்தொடர்புப் பகுதி என்று பல அத்தியாவசிய சேவைப் பிரிவுகளுக்கும் வேலை நிறுத்தம், அடையாள வேலைநிறுத்தம் என்பன தொற்றுவியாதிகள் போலப்பரவியுள்ளன; தொடர்ந்து பரவியும் வருகின்றன.

போக்குவரத்து முற்று முழுதாகப் படுத்து விட்டது. அதனால் நகரில் அலுவலகங்கள், தொழிலகங்கள், வேலைத்தலங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது கடமைகளுக்குச் செல்வது தடைப்பட்டுள்ளது.

கல்கிசை தொடக்கம் கொழும்புக் கோட்டைவரை பலர் நடந்து செல்வதைத் தலைநகரில் காணமுடிகிறது. திறந்த லொறிகளில் பெண்கள், குழந்தைகள் உட்படப் பலர் பயணம் செய்கிறார்கள், வீதியால் வரும் தனிப்பட்டோர் வாகனங்களில் பயணிகளைப் பொலீசார் ''அடைத்து'' அனுப்புகின்றனர். வண்டில்களிலும் பயணம் கட்டத் தொடங்கி விட்டார்கள் தலைநகரத்து மக்கள்.

போக்குவரத்துப் பாதிக்கப்பட்டு ஊழியர் வரவு குறைய, மக்களின் அன்றாட வாழ்க்கையின் இயல்புநிலை பேணத் தேவைப்படும் பல அத்தியாவசிய சேவைகள் தாமாகவே பாதிக்கப்பட்டுவிட்டன. ஒட்டு மொத்தமாக தலைநகரிலும், தென்னிலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் நாளாந்த வாழ்க்கை முடங்கிப் போகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

போக்குவரத்து ஊழியர் வேலைநிறுத்தம் தொடங்கி இரண்டு வாரங்களாகியும், சமரசத்தை உருவாக்கி, வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கத்தினால் இயலவில்லை. முதலில் போக்குவரத்துத்துணை அமைச்சர் பேசிப் பார்த்தார்; பின்னர் முழுமந்திரியே பேசினார். ஆனால் பயன் எதுவும் இல்லை. வேலை நிறுத்தம் தொற்று நோய் பரவி வருவதே விளைவாகிவிட்டது.

இயலாத பட்சத்தில், ஊழியர் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையில், அரசு அவசர காலச் சட்டக் கத்தியையும் கொண்டு வந்திருக்கிறது. அந்தக் கத்தியைக்கண்டும் வேலை நிறுத்தக்காரர் பயந்ததாக இல்லை. நாளை திங்கட்கிழமைக்கு முன் கடமைக்குத் திரும்பாவிடில் வேலைநிறுத்தக்காரர் தமது வேலையை இழந்தவர்களாகக் கணிக்கப்படுவார்கள் என்று அரசு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அதற்கும் போக்குவரத்து ஊழியர்கள் அடிபணிவார்கள் என்று எண்ண முடியவில்லை.

ஏனெனில் அவர்களுக்குப் பின்னுக்கு நிற்கும் சக்தி எதற்கும் பணியும் போக்கில் இல்லை. அந்தச் சக்தியின் செல்வாக்கும், ஆதிக்கமும் தெற்கில் ஸ்திரமடைந்து வருவதே அந்தப் போக்குக்குக் காரணம் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்; மதிப்பிடுகிறார்கள்; எடை போடுகிறார்கள்.

சகல ஊழியருக்கும் ஆகக் குறைந்தது 2,500 ரூபா மாதச் சம்பளம் வழங்க வேண்டும் என்ற மீதான கோரிக்கையை முன் வைத்து பன்னிரண்டு தொழிற்சங்கங்கள் இணைந்து போராட்டம் நடத்த இருக்கின்றன. அது பற்றிய அறிவிப்பு அவசரகாலச் சட்டம் பிறப்பித்த பின்னரே வந்திருக்கிறது. இது, அரசியல் அவதானிகள் கருதுவது சரியானதே என்பதற்கு சான்று பகர்வது போல உள்ளதல்லவா?

உணவு முத்திரைக்காரருக்கு மாதாந்தம் 2,500 ரூபா வழங்க முடியுமானால், வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள வேளையில், உழைப்பவர்களுக்கு ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக ஏன் அந்தத் தொகையை வழங்க முடியாது? இந்தக் கேள்வியின் அடிப்படையில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் எழுந்துள்ளன.

ஜனசக்தித் திட்டத்தின் கீழ், இரண்டு வருடங்களுக்கு மட்டுமே 2,500 ரூபா மாதாந்தம் வழங்கப்படும். அதில் ஒரு பகுதியைச் சேமித்து இரண்டு வருடங்களின் பின் தொழில் முயற்சியை ஆரம்பிக்க வகை செய்யப்படும். வசதி இல்லாதவர்களுக்கு சுயதொழில் தேடிக்கொடுத்து வாழவைக்கும் திட்டமே ஜனசக்தி. இதனைப் புரிந்து கொள்ளாமல், வேண்டாத கோரிக்கைகளை முன்வைக்கிறார்களே என்று ஜனாதிபதி பிரேமதாச கவலைப்படுகிறார். ஆனால் அந்தப் புரிந்து கொள்ளாமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கலாம் சிலர்!

எது எப்படியோ!

மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு, முடங்கிப் போகும் ஆபத்து நிலை ஒரு பக்கம். அவசரகாலச் சட்டத்தைப் பாவித்து நிலைமையை வழிக்குக் கொண்டு வரலாம் என்ற நினைப்புடன் அரசு. இந்த இரண்டுக்கும் இடையில், பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்குப் போல மக்கள்.

**இத்தகைய சூழ்நிலையில் தென்னிலங்கையில் எந்த விதமான அரசியல் எரிமலை எப்போது வெடிக்குமோ என்ற நெருக்கடியான கட்டம் நெருங்கி வருகிறது!**

# அங்கோலாவில் யுத்த நிறுத்தம்
# வெள்ளி நள்ளிரவு முதல் அமுல்

லுவாண்டா, ஜூன் 24

அங்கோலா கிளர்ச்சிக்காரர்களும் அங்கோலா அரசாங்கமும் 22 ஆம் திகதி நடைபெற்ற 18 ஆபிரிக்கத் தலைவர்களின் உச்சி மாநாடு ஒன்றில் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்துள்ளார்கள்.

அங்கோலாவில் 14 ஆண்டு காலமாக நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய இந்த யுத்த நிறுத்தம் 23 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்று உச்சி மாநாட்டுப் பிரகடனம் கூறுகின்றது.

அங்கோலா ஜனாதிபதி ஜோஸ் எடுவாடோ டொஸ் சந்தோசும் யூனிற்ற கிளர்ச்சித் தலைவர் ஜோனஸ் சவிம்பியும் யுத்தம் ஆரம்பித்தபின் இந்தஉச்சி மாநாட்டின்போது தான் முதல் தடவையாக நேருக்கு நேர் சந்தித்தார்கள்.

அவர்கள் இருவரும் கைகுலுக்கிக் கொண்டதாகவும் இந்தக் கைகுலுக்கல் அங்கோலாவில் உள்நாட்டு யுத்தத்தின் முடிவைக் குறிக்கின்றது எனவும் ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்தின் தலைவர் மௌசா ட்ராஒரே தெரிவித்தார். (ச)

# சீனு கம்யூனிஸத்தை கைவிடாது
## உறுதியாக நிற்கும்
### மக்கள் தினசரி ஆசிரியர் தலையங்கம்

பீக்கிங், ஜூன் 24

உலகின் இதர பாகங்களில் உள்ள கம்யூனிஸ்ட் நாடுகள் அரசுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளபோதும் சீனு கம்யூனிஸத்தில் உறுதியாக நிற்கும் என்று சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீன 'மக்கள் தினசரி' வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம் ஒன்று இவ்வாறு கூறியது.

'கம்யூனிச நாடுகள் கம்யூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மேற்கொண்டு ஏகபோக முதலாளித்துவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் போக்கு ஒன்று உலகில் தோன்றியிருக்கிறது. இந்தப் போக்கை நாம் உறுதியாக எதிர்க்கின்றோம். நாம் எதிர்க்காவிட்டால் சீனு மீண்டும் சர்வதேசிய முதலாளித்துவத்தில் கீழ் வரும்' என்று இந்த ஆசிரியர் தலையங்கம் கூறியது.

கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தாவிட்டால் ஹங்கேரி, போலந்து ஆகியவற்றில் போல சீனுவிலும் சில ஆண்டுகளில் சிறுபான்மைக் கட்சியாகிவிடும் என்று சீனத் தலைவர்கள் அஞ்சுவதையே இத்தலையங்கம் பிரதிபலிக்கின்றது என சீன அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

ஹங்கேரி, போலந்து, யூகோஸ்லாவியா, சோவியத் யூனியன் ஆகியன கிளர்ச்சிக்காரர்களை உறுதியாகக் கையாளாததால் இந்த நாடுகளில் கடுமையான உள்நாட்டுப் பிரச்சினைகள் எழுந்துள்ளன, என தெல்சியாவ்பிங் சொற்பொழிவுகளில் கூறியுள்ளார். அத்துடன் 'சீனு அந்த தவறை இழைக்கக்கூடாது' எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

சீனத் துணைப் பிரதமர் தியன் ஜியுன் சீனச் சந்தையைப் பற்றிக் கூறிய கருத்துக்களையும் 'மக்கள் தினசரி' ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

'சீனச்சந்தை பிரமாண்ட உள்ளார்ந்த வளம் உடையது. இதனைக் கைவிடுபவர்கள் பின்னர் கவலைப்படுவார்கள் சீனுவுடன் செய்வதற்குப் பெருமளவு வர்த்தகம் இருக்கின்றது. இதன்மூலம் பணம் சம்பாதிக்கலாம். ஒருநாடு இல்லாவிட்டால் இன்னொரு நாடு வரும்' என்று அவர் கூறியுள்ளார்.

## குரங்கு பிடித்தவருக்கு ஆயுட்காலத் தண்டனை

பீக்கிங், ஜூன் 24

பொன் நிறக் குரங்குகளைப் பொறி வைத்துப் பிடித்தவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

மத்திய சீனுவிலுள்ள நீதிமன்றம் ஒன்று இத் தண்டனையை வழங்கியிருக்கிறது.

மத்திய சீனுவிலும் தென்மேற்கு சீனுவிலும் உள்ள மலைப் பிரதேசங்களில் காணப்படும் பொன் நிறக் குரங்கு அரசாங்கத்தால் பாதுகாக்கப்படும் மிருகங்களில் ஒன்றாகும்.

ஹேப்பே மாகாணத்தைச் சேர்ந்த வால் யொல் என்ற விவசாயியே இன்னும் சிலருடன் சேர்ந்து 1984 செப்டெம்பருக்கும் 1988 ஜனவரிக்கும் இடையில் 18 பொன் நிறக்குரங்குகளைப் பிடித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார்.

இவர் ஷஹான் மிருகக் காட்சிச்சாலை டிரெக்டர் வாப் பிலின்னுடன் கூட்டுச் சேர்ந்தே இந்தத் திருட்டில் படுபட்டார் என் விசாரணையின் போது தெரியவந்தது. (க)

## கசையடி - சிறைத்தண்டனை: இந்தியர் அப்பீல் செய்யமுடியாது

சிங்கப்பூர், ஜூன் 24

சிங்கப்பூரில் விஸாவில் அனுமதிக்கப்பட்ட காலத்துக்குக் கூடுதலாகத் தங்கிய ஒன்பது இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட கசையடியையும் சிறைத் தண்டனையையும் ஒட்டி அவர்கள் அப்பீல் செய்ய முடியாது என்று உயர் நீதிமன்றம் 23ஆம் திகதி தீர்ப்பளித்துள்ளது.

சிங்கப்பூர் குடிவரவுச் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தண்டனை வழங்கப்பட இருக்கிறது.

சிங்கப்பூர் அதிபரிடம் கருணை காட்டும்படி கோருவதே இத்தண்டனையிலிருந்து அவர்கள் தப்பக்கூடிய ஒரே வழி என அறிய வருகின்றது.

### திசைமாறிப் பறந்த
## அமெரிக்க விமானங்கள் தரை இறங்க வைக்கப்பட்டன

புதுடில்லி, ஜூன் 24

இந்தியப் போர்க்கப்பல்கள் இரண்டு அமெரிக்க விமானங்களை மேற்கு இந்தியாவில் தரை இறங்கச் செய்தன என இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விமானங்கள் மார்க்சம் மாறி பாதுகாப்பு நிறுவனங்களுக்கு மேலாகப் பறந்தன எனறும் அவர் கூறினார்.

### சீனுவுக்கான
## உலக வங்கிக்கடன் தாமதம்

வாஷிங்டன், ஜூன் 24

உலக வங்கி சீனுவுக்கான பெரும் கடன் ஒன்றை வழங்குவதைத் தாமதித்துள்ளது.

சீனுவில் நேரடியான பரிசிலனையை உலக வங்கி அதிகாரிகள் செல்த பின்னரே 16 கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர் தொகையான இந்தக் கடன் உதவியை வழங்குவதா என்பது பற்றிப்பரிசீலிக்கப்படும் என்று உலக வங்கியின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஜனநாயத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை சீன அரசாங்கம் நசுக்கியதை ஆட்சேபித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அறியப்படுகிறது. (க)

## பத்திரிகைகள் பணிபற்றி பிரதமர் காந்தி

நாக்பூர், ஜூன் 24

எதிர்க்கட்சிகளின் தேச விரோத செயல்களை பத்திரிகைகள் அம்பலப்படுத்த வேண்டும் என்று இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கேட்டுக்கொண்டார்.

நாகபூரில் மராத்திநாளிதழ் ஒன்றை அவர் ஆரம்பித்து வைத்தார்.

அப்போதே இதனைத் தெரிவித்தார். (எ)

## பசுபிக்கில் அணு பரிசோதனை தொடரும் என பாரிஸ் தகவல்!

சிட்னி, ஜூன் 24

பசுபிக் பிரதேசத்தில் அணு பரிசோதனைகளை தொடர்ந்து நடத்தப் போவதாக பிரெஞ்சுப் பிரதமர் மைக்கல் றொக்கர்ட் தெரிவித்தார்.

'ஆஸ்ரேலியா ருடே' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில், அணு ஆயுத பரிசோதனைகளைக் குறைக்க முடியும். ஆனால் முற்றாக நிறுத்தும் எண்ணம் பாரிஸ் அரசுக்குக் கிடையாது, என்று சொன்னார்.

ஆஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹோக் கடந்த ஞாயிறு 5 நாள் பிரெஞ்சு விஜயம் ஒன்றை ஆரம்பித்தார். (எ)

## பெருவில் இராணுவ - கெரில்லா மோதல்

லிமா, ஜூன் 24

பெரு அரசாங்கத் துருப்புகள் 20 இடதுசாரிக் கெரில்லாக்களை சுட்டுக்கொன்றது. பலரைக் காயப்படுத்தியது.

பெருவின் கிழ்ப்புறக்காட்டில் நடைபெற்ற சமரிலேயே இது இடம்பெற்றது எனப் பெரு ராணுவம் 21 ஆம் திகதி அறிக்கை ஒன்றில் கூறியது.

19ஆம் திகதி நடைபெற்ற சமரில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அகுவைத்தியா என்ற நகருக்கு அண்மையில் இராணுவ வாகனக் கூட்டம் ஒன்றை மறித்துத் தடுத்த கெரில்லாக்களே இவர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்று அறிக்கை கூறியது. (க)

## அமைச்சரவை மாற்றம்

பிரிட்டிஷ் அமைச்சரவை மாற்றி அமைக்கப்படவுள்ளது அடுத்த மாத ஆரம்பத்தில் இம்மாற்றம் அறிவிக்கப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி அமைச்சர் மைக்லோசன், உள்துறை டக்ளஸ் ஹேர்ட், வெளியுறவு அமைச்சர் ஜிப்ரிஹோ ஆகியோர் தொடர்ந்து அதே பதவிகளை வகிப்பர்.

பிரதமர் திருமதி தாட்சர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி, கடந்த வாரம் நடந்த ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே அமைச்சரவை மாற்றம் இடம் பெறவுள்ளது. (எ)

## அனுமதி மறுப்பு

அமெரிக்காவில் இந்துக் கோயில் கட்ட அனுமதி மறுக்கப்பட்டது:

வாஷிங்டன் புறநகர்ப்பகுதியான வேர்ஜினியாவில் ராஜ்தனி மந்திர் என்ற பெயரில் இந்து ஆலயம் ஒன்று நிறுவ பரிபாக்ஸ் கவுண்டியின் திட்டமிடல் சபையிடம் அனுமதி கோரப்பட்டது.

ஆலயத்தை நிறுவுவதற்குத் தேவையான நிபந்தனைகளை ஆலய நிர்மான சபை பூர்த்தி செய்திருந்தது.

ஆனால் அப்பகுதி மக்கள் ஆலயம் கட்டுவதற்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டது.

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 25

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை ஸ்ரீ அம்பாள்கோயில் அலங்கார உற்சவம் 22 ஆம் திகதி முதல் பத்து தினங்கள் நடைபெறுகின்றன.

பத்தாம் நாள் உற்சவத்தன்று மாலை ஆறு மணிக்கு தீப பூசை நடைபெறவும் ஏற்பாடாகி இருக்கிறது. (ச-31)

## புங்குடுதீவு அந்தோனியார் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 25

புங்குடுதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஜூலை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமைபிற்பகல் 4 30மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

அன்று பிற்பகல் 6 மணிக்குத் திருப்பலிப்பூசைநடைபெறும்.

8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 30 மணிக்கு கூட்டு வழிபாடு, பஜனை, சிறப்புரை ஆகியவை இடம் பெறும்.

9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு திருவிழா பூசைப்பலி [illegible] திருவிருந்தும் [illegible] மணிக்கு புனித அந்தோனியார் [illegible] பவனியும் 10-30 மணிக்கு

# நெய்தல் நிலப்பரப்பை அண்டிய இலக்கியப் படைப்புகளும் அவசியம்
### கலாசார பேரவைக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 25

'ஈழ — நெய்தல் நிலப்பரப்பை அண்டி வாழும் தொழிலாளவர்க்கத்தையொட்டிய கலை — இலக்கியப் படைப்புக்கள், பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. ஏனைய தொழிலாள—விவசாய வர்க்கத்தினரின் உரிமைக் குரல்களை எழும்புவதற்குப் பல மாதாந்த இலக்கிய சஞ்சிகைகள் வெளிவருகின்றன, ஆகவே கடலோடு போராடும் மக்களின் எழுச்சிக்கும், அவர்களின் உரிமைக்குரலை வெளிக்கொணர்வதற்கும் 'சாகரம்' என்ற மாதாந்த இலக்கிய சஞ்சிகையை பாஷையூர் கலாசார பேரவை ஆரம்பித்துள்ளது.

பேரவையின் பிரதமஅமைப்பாளர் கவிஞர் தேவதாசன் மேற்கண்டவாறு கூறினார்:

இக்கூட்டம் வைத்தியகலாநிதி சின்னப்பு மோசேஸ் தலைமையில் பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கவிஞர் தேவதாசன் தொடர்ந்து பேசுகையில் கிராமியக் கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத்து புனரமைப்புக்காக இப்பேரவை அன்று ஆரம்பிக்கப்பட்டபோதிலும், இன்று கடலைநம்பி வாழும் மக்களின் பாரம்பரிய நவீன கலை, இலக்கியங்களை வெளியிடுவதற்கு இப்பேரவை சஞ்சிகை ஒன்றை ஆரம்பிப்பது பெருமைக்குரியது என்றார்.

பேரவையின் புனரமைப்புக் கூட்டத்தில் வைத்தியகலாநிதி சின்னப்பு மோசேஸ் பேரவையின் தலைவராகத் தெரிவானார். (இ)

## காட்டுத்துறை விநாயகர் கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறைஅருள்மிகு அம்பலவாண ஸ்ரீ விநாயகர்ஆலய வருடாந்த மஹோற்சவம்சென்ற வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

ஜூலை மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமைதீர்த்தோற்சவமும் நடைபெறும்·[க-90]

## செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ். நகரில்

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனிவா தலைமையக உயர் அதிகாரிகள் இருவர் யாழ்நகருக்கு விஜயஞ் செய்தனர்.

திரு. ஜெவ் அல்டேசன், செல்வி வென்ற லூட்வேர்ட் ஆகியோரே இந்த இரு அதிகாரிகளும் ஆவர்.

இவர்கள் யாழ் செஞ்சிலுவைச்சங்கக் கிளைக்கு வழங்க வென'பிக்கப்' ஜீப்ஒன்றையும் தம்முடன் கொண்டுவந்தனர்.

## திருமுறைவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 23

வவுனியா கந்தசாமிக்கோயில் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியை இந்துமாமன்றமும் ஆலய பரிபாலன சபையும் இணைந்து நடத்தி வருகின்றன. 1 ஆம் திருமுறை நிறைவு பெற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் அதற்கு விழா எடுக்கப்பட்டது.

விழாவிற்கு ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள் தலைமை வகித்தார்.

சமய வகுப்பு மாணவிகளின் பேச்சுக்களும் சைவப்பிரகாச மாணவிகளின் பண்ணிசையும் சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. வழமையான மாலைப் பூசைக்குப் பின் பன்னிருதிருமுறை என்ற விடயத்தில் சற்சங்கமும் நடைபெற்று விழா நிறைவு பெற்றது. (இ)

## அடையாளம் காணப்பட்டார்

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் மரணமானவர் 55ஆம்கட்டையைச் சேர்ந்த ஆண்டி இராசு (வயது 20) என அடையாளம் காணப்பட்டார். ஒ-76-163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


# உதயன்

25 - 06 - 1989 ஞாயிற்றுக்கிழமை


திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் நேற்று வழங்கிய உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25 அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 1983ல் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு 12 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கியது.

வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து இவ் உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

கோழி வளர்ப்பு, 42 குடும்பங்கள், கடைவியாபாரம் 35 குடும்பங்கள், மீன்பிடி வலை 52 குடும்பங்கள்' தையல் இயந்திரம் 64 குடும்பங்கள், மாட்டு வண்டி இரண்டு குடும்பங்கள்: நீர் இறைக்கும் இயந்திரம் ஏழு குடும்பங்கள் என்ற அடிப்படையில் இவை வழங்கப்பட்டன. (ஓ-10-3)

## நகைக் கடைகள் திறக்கப் படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 25 நேற்று யாழ் நகரில் உள்ள நகைக் கடைகளில் பெரும்பாலானவை திறக்கப்படவில்லை. மண்கும்பான் பகுதியில் வெட்டிக் கொல்லப்பட்ட நகைக் கடை உரிமையாளர் ஒருவரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டே கடைகள் மூடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. ஓ-9)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### ✶ செல்வன் S. தரணீபன் ✶

25- 06- 1989

கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சிவநேசன் — இந்திரா தம்பதியரின் செல்வப் புதல்வன் தரணீபன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (25 06. 1989 இல்) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்புள்ள அப்பா, அம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், ஜேர்மனியில் இருக்கும் சித்தப்பாமார், மச்சான்மார், பிரான்சில் இருக்கும் சித்தப்பாமார், மச்சான்மார், சித்திமார், மச்சாள்மார், ஏழாலையில் இருக்கும் அம்மம்மா, ஆசைமாமா, ஆசா, சித்தா, சச்சேரியில் இருக்கும் பெரியம்மா, பெரியப்பா, அக்கா, அண்ணா, ஐயா ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(சி/ 2727)

## பதினான்காம் நினைவு தினம்



### அமரர் திரு. நா. சிவகுரு

(பகிரங்க வேலைப்பகுதி மேற்பார்வையாளர்)

தோற்றம்: 20 — 07 — 1908
மறைவு: 30 — 06 — 1975

நினைவுத் திதி: 25 - 06 - 1989

ஆண்டுகள் ஏழிரண்டு அகன்றனவேனும் ஐயா
ஆண்டவன் தொண்டும் உற்றார் விருந்தெலாம்
அணைக்கும் அன்பும்
பூண்ட சீர்ப் பதவி தன்னுற் புரிந்த
நற் பணியும் உன் பால்
வேண்டினர் பெற்ற பேறும் விளங்கவுன் நாமம் வாழி!

உங்களை என்றும் மறவாத
— குடும்பத்தினர்.

'குகவாசம்'
மயிலணி,
சுன்னாகம்.

[969]

# மக்கள் தந்த ஆணைக்கு மிஞ்சியது அல்ல ஒப்பந்தம்

## ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 25 ஒப்பந்தமோ அல்லது மற்றெதுவுமோ மக்கள் தேர்தல்களில் வழங்கிய ஆணைக்கு மிஞ்சியது அல்ல.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மஹியங்கனையில் நடந்த கம் உதாவ கொண்டாட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவரது பேச்சின் சில பகுதிகள் நேற்றைய சஞ்சீவியில் வெளியானது. ஜனாதிபதியின் முழுப்பேச்சிலும் இருந்து மேலும் சில அம்சங்கள் வருமாறு:-

★ ஜூலைக்குப் பின்னர் இந்திய அமைதிப்படை வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

★ ஒப்பந்தமோ, அல்லது வேறு எதுவுமோ ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்கள் அளித்த ஆணைக்கு மிஞ்சியது அல்ல.

★ அமைதிப்படையை விலக்கி நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படி ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்தியாவைக் கோரியது

★ சுதந்திரக் கட்சியோ பதவிக்கு வந்தால், அமைதி ஒப்பந்தத்தையே கிழித்தெறியப் போவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தது.

★ இரண்டு கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் இந்தியப் படையை வாபஸ் வாங்க வேண்டும் என்பதை 95·38 சதவீத மக்கள் ஆதரித்து இருப்பது தெரிகிறது.

★ அமைதிப்படை வாபஸ் வாங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுவதற்கு முன்னர் இந்தியாவுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

★ தேர்தலில் எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் அமைதிப் படையை விலக்கியே ஆக வேண்டும் என்பது இந்தியாவுக்குத் தெரிந்ததே.

★ ஜூலை 31க்கு முன்னர் அமைதிப்படையை விலக்கிக் கொள்ள முடியாதுபோனாலும் அமைதிப்படை எமது விவகாரத்தில் தலையிடக்கூடாது.

★ இந்தியாவுக்கு வேறு எந்த நாடும் புத்தி சொல்ல வேண்டியதில்லை என்று பிரதமர் காந்தி கூறியிருப்பதையே அவருக்கு நான் திருப்பிக் கூற விரும்புகின்றேன்,

★ இந்த ஒரு விஷயத்தில் நானும் ராஜீவ்காந்தியும் ஒத்துப் போகிறோம்.

★ இலங்கைக்கு எவரும் புத்தி சொல்ல வேண்டியதில்லை.

ஐக்கியத்தை நிலைநாட்ட ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று இந்தியாவை நான் கோருகின்றேன்.

★ ஆகவே தயவுசெய்து நீங்கள் போங்கள். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம்.

★ ஜூலை இறுதியின் பின்னர் எனது நாட்டின் ஓர் அங்குலக் காணியில்கூட இருப்பதற்கு அமைதிப்படைக்கு உரிமையில்லை.

★ படை, பட்டாளங்களை ஏற்றுக்கொண்டு போவது சிரமம் என்று சொல்கிறார்கள்: பல கப்பல்களை ஏற்பாடு செய்து, சொல்லப்பட்ட தினத்துக்கு முன், அவற்றில் திரும்பலாம்தானே.

★ படையை விலக்குவது பற்றி பேச்சுக்கள், ஆலோசனைகள் நடத்த வேண்டும் என்று பிரதமர் காந்தி சொல்கிறார். என்ன ஆலோசனைகள் வேண்டியிருக்கிறது?

முன்னரே பேச்சுக்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. (அ-எ)

## கடத்தப்பட்ட மூன்று பேரும் விடுவிக்கப்படவில்லை என்று

### ஈரோஸ் இயக்கத்தினர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 25 தெல்லிப்பளையில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்கள் மூவரும் நேற்று மாலை வரை விடுவிக்கப்படவில்லை என்று பிரஸ்தாப இயக்க வட்டாரங்கள் கவலை தெரிவித்தன

வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் தெல்லிப்பளையில் வைத்து ஈரோஸ் உறுப்பினர்களான ஜோசப், சந்திரன் ஜோண்சன் ஆகிய மூவரும் கடத்திச் செல்லப்பட்டதாகவும் -

நேற்று மாலை வரை அவர்களது நிலைமை குறித்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் கூறின. (ஓ-10)

### கழுத்தில் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றில் அவர்கள் செய்த குற்றங்கள் எழுதப்பட்டிருந்தன.

அந்த இடத்துக்கு விரைந்து சென்ற பொலீஸார். கட்டப்பட்டிருந்த இளைஞர்களில் குற்றச் செயல்களுக்காக தேடப்பட்டுவந்த இரண்டு நபரை கூட்டிச் சென்றனர். ஏனையோர் கட்டப்பட்டிருந்த நிலையிலேயே தொடர்ந்து விடப்பட்டனர்.

தேசப்பிரேமி இயக்கப் பெயரை பாவித்து பொது மக்களிடம் இருந்து பணம் பறிப்பவர்களுக்கு இதுவே தண்டனை என அட்டைகளில் எழுதப்பட்டிருந்தது. (ஓ-எ)

### சீன. கம்யூ. தலைவர் பதவி நீக்கம்

பீகிங், ஜூன் 25 சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஷியாங் ஷியா பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஜனநாயக உரிமைகோரி மாணவர் நடத்திய கிளர்ச்சிகளுக்கு ஆதரவளித்ததாக குற்றஞ்சாட்டி இவர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார், (ஓ-எ)

### சாரதி சுடப்பட்டார்

கொழும்பு ஜூன் 25 சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் சாரதி நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்: (இ)

### சமாச மகளிர் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25 யாழ். மாவட்ட சமாச மகளிர் நடத்தும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

மாலை 3. 00 மணிவரை வைபவங்கள் நடைபெறும். (இ)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25 யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

திரு. செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பரிசளிப்புரை நிகழ்த்துவார்.

மதுர கவி இ. நாகராஜன் நினைவுப் பேருரையும் "மதுர கவிதைகள்" நூல் வெளியீட்டுரையையும் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) நிகழ்த்துவார்.

## மினி பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம்

### சங்கத் தலைவர் வேண்டுகோள

தற்பொழுது எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட போதிலும் மினிபஸ் உரிமையாளர்கள் இந்த நெருக்கடியை அனுசரித்து கட்டணத்தை அதிகரிக்கக் கூடாது.

வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத்தின் தலைவர் பொன். மதிமுகராசா இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி தற்காலிகமானதே எனவே ஒரு சில தினங்களுக்கு எரிபொருள் விலை அதிகமாக இருப்பினும் அனுசரித்துப் போகும்படியும்-

இந்நிலை தொடருமானால் தற்காலிக கட்டண அதிகரிப்புப்பற்றி பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் மினிபஸ்காரர்கள் எவராவது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கட்டணத்தை அதிகரித்தால் பிரஸ்தாப சங்கத்துக்கு முறையீடு செய்யும்படியும் அவர் கேட்டுள்ளார். (ஓ-9)

QUANTITY SURVEYING 627
CITY AND GUILDS
FOR EXAMINATIONS IN 1990
PART-I Measurement of Building Work
PART-II Measurement
PART-II Estimating and Analysis of Prices
CLASSES COMMENCES ON JULY 3rd
ATLAS GROUP
Adiyapatham Road, Tirunelvely.
(966)

## மரண அறிவித்தல்கள்

### Dr. காசிப்பிள்ளை முருகேசம்பிள்ளை

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த Dr. காசிப்பிள்ளை முருகேசம்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் திரு. காசிப்பிள்ளை, திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், மல்லிகேஸ்வரியின் அன்புக் கணவரும், இந்திராதேவி, நந்தினி, சுவீந்திரன் (சுவிற்சலாந்து), இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகாந்தனின் (People's-Bank) அன்பு மாமனும், அபிராமியின் பேரனும், தனலட்சுமி, நல்லதம்பி, சுப்பிரமணியம் (Engineer-Labour Dept), வைரமுத்து (Pharmacist G H Jaffna), சதாசிவம் (Rtd; C.G.R.) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்றயதினம் (24-6-89) அளவெட்டியில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. சுப்பிரமணியம்.

(11350)

### திரு. சி. காங்கேசு

கரணவாய் தெற்கைச் சேர்ந்த சி. காங்கேசு அவர்கள் காலமானார்.

இவர் திருமதி இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், அருளானந்தம் (வல்வெட்டி இந்து வித்தியாலயம்), சிவானந்தம் (திருகோணமலை), ஈஸ்வரானந்தம் (C.T.B பருத்தித்துறை), கோவிலானந்தம் C.T.B கிளிநொச்சி), முருகானந்தம் (சிறுப்பர், கச்சேரி, கிளிநொச்சி), விவேகானந்தம் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை நோலூட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகள் சிவபாக்கியம், இந்துமதி, பரமேஸ்வரி, இராசலட்சுமி, செல்வராணி, சரோஜினி (பொறியியலாளர், R.C.D.C நோலூட்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-06-1989 ஞாயிற்றுக்கிழமை இன்று பி.ப. 2-00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(987)

### திரு. அ. பாக்கியநாதர் (சீனிராசா)

பெரியவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புனித பத்திரிசியார் கல்லூரி இளைப்பாறிய லிகிதருமான திரு. அ. பாக்கியநாதர் அவர்கள் 21-06-1989 இல் காலமானார்.

இவர் திருமதி பா. மேரியோசப்பின் (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், மரியநேசன் (பிரான்ஸ்), அருட்சகோ லீனஸ் S. S. J., புஸ்பம், கொன்சி, றவி (தாய்வான்), வின்சி, வனிதா, செல்வா, ஜொய்சி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வித்துவான் அ. சந்தியாப்பிள்ளையின் அருமைச் சகோதரரும், திரு. பி. நவநாதன் அவர்களின் அருமை மாமனாரும், அருட்திரு. மரிய செபஸ்தியன் அ. ம. தி. அவர்களின் அருமைச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-06-1989 திங்கட்கிழமை மாலை 3·00 மணிக்கு பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அருட்சகோ. லீனஸ் S. S. J.
(மகன்)

புஷ்பா இல்லம்,
பெரிய விளான்,
இளவாலை

(11360)

### திருமதிபொன்னம்மா கனகரட்ணம்

(சங்கானை)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கனகரட்ணம் அவர்கள் 24-06-1989 பிற்பகல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு T. கனகரட்ணம் (மலேயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், K. நடராஜா (Engineer Brunei), T. K. வில்வராஜா (Retd Teacher), காலஞ்சென்ற K. தர்மராஜா (Jailor, Prisons Dept), மனோரஞ்சிதம், மகாராணி, K. குணராஜா (Engineer, Brunei), K. சிவராஜா ஆகியோரின் அருமைத்தாயாரும், திருமதி நிர்மலச்செல்வி நடராஜா (Teacher, Brunei), திருமதி புஸ்பராணி வில்வராஜா (Teacher, Kondavil Ramakrishna M.V), திருமதி இராஜலக்ஷ்மி தர்மராஜா (Teacher, Vada Hindu Ladies), S. சண்முகலிங்கம்( Retd Planter), T. காலிங்கராஜா (Retd Stores Manager, General Industries Ltd), திருமதி சுவர்ண குணராஜா (Brunei). திருமதி கனகலக்ஷ்மி சிவராஜா ஆகியோரின் அன்பு மாமியும் விஜேயானந்தன் (Engineer Singapore), உமா கௌரி (L L B Lond), தாக்ஷாயினி (Australia), ரமணி (Jaffna Hindu Ladies), தர்மேந்திரா (St. John's Jaffna), பிரதீபன் (London), தர்ஷினி (Holy Famely Conuent, Colombo), சுகன்ஜா (Brunei), லவன்ஜா (Brunei) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி இல்லத்தில் நாளை திங்கட்கிழமை நண்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்;

தகவல்:
T. K. வில்வராஜா.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு:

(C/2728)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 25 06-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org